
பக்கங்கள்-16 | பங்குனி,08.2015 | விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

நடுநிலை இதழ்
# தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

E.B.N மல்டி சொப்
E B N Multi shop
கிளை உடையார்கட்டு

No.165/5,
(Opposite Kandasamy kovil)
Kilinochchi
இல.165/5,
கந்தசாமி கோவில் முன்பாக,கிளிநொச்சி
T.p.0774547728,0212285315-14


மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -113

## பண்டாரநாயக்காவை கொலைசெய்த பௌத்த பிக்குகள் மைத்திரிபால சிறிசேனவையும் கொலைசெய்யக்கூடும்



## போர்க்குற்ற விசாரணை என்றால் என்ன ?





## திருகோணமலை கோத்தா கடற்படை முகாமில் 700 க்கு மேற்பட்ட சரணடைந்த போராளிகள் - MP. சுரேஸ்

Family STYLE & Tailors
024-2227315 / 077-1721212
வடமாகாணத்தில் 2014ம் ஆண்டிற்கான ஆடைக் கைத்தொழிலில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட உங்கள் ஒரே குடும்ப தையலகம்.
No : 158, Bazaar Street, Vavuniya
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.
familystyle158@gmail.com

# பண்டாரநாயக்காவை கொலைசெய்த பௌத்த பிக்குகள் மைத்திரிபால சிறிசேனவையும் கொலைசெய்யக்கூடும்.


இவ்வருடம் இடம்பெற்ற இலங்கையின் ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள மைத்திரிபால சிறிசேன அவர்கள், வரலாற்று ரீதியாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு வடமாகாண சபை உறுப்பினர்களையும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உட்பட ஏனைய உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடிய விடயம் மகிழ்ச்சி தரும் அதேநேரம், இதனது பின்னணிகளை பார்க்கின்றபொழுது, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை மையப்படுத்தியே மைத்திரிபால சிறிசேனவின் வடக்கு விஜயமும். அபிவிருத்திக்குழுவின் கூட்டமும் அமைந்துள்ளது என ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள், நான் இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு தேர்தலில் போட்டியிடுவதற்காக வாக்குக் கேட்டு வந்தேன். ஆனால் இன்று ஜனாதிபதியாகவந்துள்ளேன். என்னை வெற்றியடையச் செய்தமைக்கு வடக்கு மக்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நாட்டில் இனம், மதம் என எதுவும் இன்றி மக்களைப் பாதுகாப்பதே எனது நோக்கம். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். நாடாளுமன்றம், மாகாண சபை என்பன இதற்கு முக்கியமான நிறுவனங்களாக உள்ளன. இங்கு உரையாற்றியவர்கள் கல்வி, சுகாதாரம், காணிப்பிரச்சினை, நிலவிடுவிப்பு பற்றிக் கூறியுள்ளார்கள்.

காணிப்பிரச்சினையை தீர்க்க குறுகிய காலத்தில் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான பொறுப்பு சுவாமிநாதனுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் சிறப்பாக செயற்பட்டு வருகின்றார். எனவே யுத்தத்தின் போது இராணுவத்தினால் பெறப்பட்ட காணிகள் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல, கொழும்பிலும் எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பில் அலரிமாளிகைக்கு எனவும் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றை விடுவிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றேன். வடக்கு மாகாணத்திற்கு சிவில் ஆளுநர் வேண்டும் என நீண்ட நாளாக கேட்டு வந்தீர்கள். ஆனாலும் அவை இடம்பெறவில்லை. நானும்பல தடவை முன்னைய ஜனாதிபதிக்கு கூறினேன். ஆனால் செயற்படுத்தப்படவில்லை. அவ்வாறு ஆளுநர் மாற்றப்படாத காரணத்தினால் தான் நான் இன்று ஜனாதிபதியாக வெற்றிபெற்றேன்.

இன்று அந்த நிலை மாற்றப்பட்டு சிவில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் மீனவர்களின் பிரச்சினை குறித்தும் நான் நன்கு அறிவேன். இவற்றுக்கும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். எமது நாட்டில் நூற்றுக்கு ஆறு வீதமானவர்கள் வேலை இன்றி உள்ளனர். கடந்த 3 வருட காலமாக பட்டதாரிகள் வேலையின்றி உள்ளதை அறிவேன். அவர்களுக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பேன். கடந்த 5 வருட காலமாக நான் சுகாதார அமைச்சராக பணியாற்றிய காரணத்தினால் வைத்தியசாலைகளில் இருக்கும் பதவி வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். கமத்தொழிலில் இருக்கும் குறைபாடுகள் குறித்தும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு விவசாயிகள். அனைத்து நாட்டுக்கும் உதாரணமானவர்களாக உள்ளதை நாங்கள் அறிவோம். தேசிய வருமானத்திற்கு வடக்கு விவசாயிகள் பெரிதும் உழைக்கின்றனர். எனவே அவர்களது பிரச்சினைக்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் குடிநீர்ப்பிரச்சினையும் இங்கு காணப்படுகின்றது. அதனை வெளிநாடுகளுடன் பேசித் தீர்க்க



நடவடிக்கை எடுப்போம். அடுத்து வடக்கு கிழக்கில் இடம்பெற்ற போரில் 80 ஆயிரம் விதவைகள் உள்ளனர் என எனக்கு அறிக்கை இடப்பட்டுள்ளது. இது போல தெற்கிலும் உள்ளனர். இவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த விசேட செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. 100 நாள் வேலைத்திட்டம் பற்றி வாராந்தம் கலந்துரையாடி, அவற்றைச் செயற்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடி வருகின்றோம்.

எதிர்வரும் நாட்களில் எமது அமைச்சர்களை அடிக்கடி அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அரசியல் தலைமைத்துவம், வடக்கு மாகாணசபை, உள்ளூராட்சி சபையினர் இங்குள்ள அபிவிருத்திகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இரும்பு மண் என்பவற்றால் மக்களை சேர்க்க முடியாது. எனவே வடக்கு, கிழக்கு, தெற்கு மக்களை உள்ளங்களால் ஒன்று சேர்க்க நடவடிக்கை எடுப்பேன். அனைவரும் பயம், சந்தேகம் இல்லாது சகோதரர்களாக வாழ வேண்டும். எங்கள் மத்தியில் இருக்கும் நம்பிக்கையுடன் செயற்பட்டு அனைவரும் ஒரே நாடாக இருந்து செயற்படுவோம். பாதுகாப்பு விடயத்தில் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தீர்க்கப்படாதவற்றை தீர்க்க வேண்டும். வறுமையினை இல்லாது ஒழிக்க வேண்டும். மக்களது பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நாங்கள் வடக்கிற்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தியது போல, தெற்கிலும் ஒற்றுமையுடன் பேசி எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வோம் என தெரிவித்தார். இவ்வாறு மைத்திரிபால சிறிசேனவின் வடக்கு விஜயத்தின் போதான கருத்துக்கள் அமையப்பெற்றிருந்தன.

இது இவ்வாறிருக்க, அப்போதைய காலகட்டத்தில் தமிழ் மக்களுக்காக திருகோணமலையில் தந்தை செல்வா. மாநாடு ஒன்றினை ஒழுங்குசெய்தார். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற இலங்கையரசிற்கு ஓராண்டுகால அவகாசம்வழங்கினார். 1957, ஜூலை 26இல் அரசு ஒரு சமாதானத்திற்கு வந்து பண்டா-செல்வா ஒப்பந்தத்தினை செய்துகொண்டது. அதில் அரசினால் கூறப்பட்ட வாக்குறுதிகளாக, தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை அரசு கைவிடும். தமிழ் மொழியும் அரசு மொழியாக சட்டம் நிறைவேற்றப்படும். தமிழ், கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் பிரதான மொழியாக இருக்கும். பிராந்திய சுயாட்சி மூலம் பிராந்திய சுய சட்டங்கள் வகுக்கப்படும் போன்றன அதில் அடங்குகின்றனது.

இதனை எதிர்த்த ஜே.ஆர். ஜெயவர்த்தன, பண்டாரநாயக்காவின் இல்லத்திற்கு நடைபயணமும் மேற்கொண்டார். இதன் விளைவாக தமிழ் ஆட்சி மொழியானதே தவிர, ஏனைய வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 1958இல் தமிழர் பிரதேசங்களிலும் வாகனத்தகட்டில் சிங்கள எழுத்து பயன்படுத்தப்படவேண்டும் என அரசு கூறியது. தமிழர்கள் இதனை தார்கொண்டு மறைத்தனர். இதனால் மே.25இல் தமிழர்களுக்கு எதிராக கலவரங்கள் ஆரம்பித்தது. பொலனறுவையில் ஆரம்பித்து கொழும்பு. யாழ்ப்பாணம் என பரவி 400 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து பண்டாரநாயக்கா தமிழர் பகுதிகளில் தமிழை மட்டும்பயன்படுத்த ஒப்புக்கொண்டார். இதனை எதிர்த்து பௌத்த பிக்குகள் அவரின் வீட்டிற்கு முன் போராட்டங்களை நடாத்தி, அவரை சிங்கள எதிரி என சித்தரித்து, பண்டா-செல்வா ஒப்பந்தத்தை கைவிடவும் வலியுறுத்தினர். அவரும் அதற்கு ஒப்புக்கொண்டு பாராளுமன்றத்திலும் அதனையே அறிவித்தார். இதனை எதிர்த்த தமிழர்களை இனவாதிகள் தாக்கினர். எங்கும் கலவரம், கொலை. 1959ம் ஆண்டில் நிலைமைகள் கட்டுக்கடங்காமல் போக, எதிர்ப்புக்களை மீறி மேற்கூறப்பட்ட ஒப்பந்தங்களை அமுல்படுத்த பண்டாரநாயக்கா முனைந்தார். செப்டெம்பர்.25 இல் சோமராம தேரர் என்ற பௌத்த பிக்குவால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதேபோன்றதானதொரு நிலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் இனத்திற்கான கருத்துக்களை கையாண்டு, 100நாட்கள் என்ற வேலைத் திட்டத்தினையும் அமுல்படுத்தியுள்ள நிலையில், இதனை எதிர்க்கும் முகமாக கண்டி தலதாமாளிகையின் வளாகத்தில் இலங்கையின் தேசியக்கொடிக்கு பதிலாக தனிச்சிங்களக் கொடியினை பௌத்த பிக்குகள் ஏற்றி பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளனர். சிவப்பு மற்றும் செம்மஞ்சள் நிறங்கள் சிறுபான்மை இனத்தினைக் குறிப்பதாகவே அமைகின்றது.

இவ்வாறானதொரு சம்பவமென்பது தமிழினத்திற்கு ஒரு விடிவினை பெற்றுக்கொடுக்க இவர்கள் விரும்பவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. இதனால் அப்பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு பொலிஸார் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இலங்கையின் நான்காவது பிரதமராகவிருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, ஜனவரி 8, 1899 - செப்டெம்பர் 26, 1959) பிரதமராக பதவி வகித்த போது பௌத்த பிக்கு ஒருவரால் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இது சிங்கள இனவாதிகளாலேயே இப்படுகொலை மேற்கொள்ளப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து நாம் ஒரு விடயத்தினை பார்க்கவேண்டும். தமிழ்பேசும் மக்களுக்கு சுதந்திரத்தினை பெற்றுக்கொடுக்கும் எந்த சிங்கள ஆட்சியாளர்களாகவிருந்தாலும் அவர்களின் நிலைமைகள் இவ்வாறே அமையப்பெறும்.

இந்த சவால்களுக்கு முகங்கொடுத்து மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்றோர் செயற்படுவது எவ்வகையில் என பலராலும் கேள்வி எழுப்பப்படுகின்றது. இதய சுத்தியுடன் இவர்கள் செயற்படுவார்களாகவிருந்தால் அது வரவேற்கத்தக்கது. இவர்களின் உரையினை நம்பியும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு புகழ்ந்து பேசியுள்ளது. ஆகவே தமிழ்பேசும் மக்களாகிய நாம், இந்த வரலாறுகளை புரட்டிப்பார்க்கும் காலத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றோம். அதிகாரத்தினை கையில் வைத்துக்கொண்டு பலதரப்பட்ட பேச்சுக்களை நடாத்தியபோதிலும் அனைத்தும் தோல்வியில் நிறைவடைந்தன.

அஹிம்சை வழியிலான போராட்டங்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் எவ்வாறு தமிழ்மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கப்போகின்றார்கள் என்பது சந்தேகங்களையே ஏற்படுத்துகின்றது. ஆகவே எதிர்வரும் காலங்களில் வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளின் ஒரு மத்தியஸ்தத்தினை ஏற்படுத்தி, அதன் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளமுடியுமே தவிர, சிங்கள இனவாத அரசின் நயவஞ்சக பேச்சுக்கு தலை சாய்ந்து போவோமாகவிருந்தால் தமிழ் மக்களுடைய தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமைகள் அனைத்தும் குழிதோண்டிப்புதைக்கப்படும் நிலைமைகள் தோன்றும்.

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## மைத்திரி அரசினை நம்புவதில் பயன் இருக்கிறதா?

கடந்தகாலங்களில் இலங்கையை ஆட்சிபுரிந்த அனைத்து அரசியல்வாதிகளுமே தமிழ்மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவில்லை என்பதே வரலாறு. இதனைவைத்துப்பார்க்கின்றபொழுது. கூட்டர சாங்கமாக செயற்படுகின்ற மைத்திரிபாலவின் அரசு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும், சந்திரிக்காவினதும் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே செயற்பட்டுவருகின்றது. ரணில் மற்றும் சந்திரிக்காவினைப் பொறுத்தவரையில், கடந்த 2000-2004 வரையான காலப்பகுதிகளில் தமிழ்மக்களுக்கான சுமுகமான தீர்வுகளை எட்டுவதற்கான அனைத்து வாய்ப்புக்களும் காணப்பட்டன.

இதன்போதே சந்திரிக்கா அவர்கள், அப்போதைய வெளிவிவகார அமைச்சராக செயற்பட்ட லக்ஷ்மன் கதிர்காமரை பயன்படுத்தி, விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பு என வெளியுலகிற்கு சித்தரித்து,அமெரிக்காவின்அங்கீகாரத்தினைப் பெற்று மீண்டும் யுத்தத்தினை ஆரம்பித்தார். தமிழினத்திற்குஎதிராகஇப்போர்ஆரம்பமானது. இக்காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் உக்கிரமான தாக்குதல்களைக் கொடுத்து சந்திரிக்காவின் அரசினை மண்டியிடவைத்தது வரலாற்றுஉண்மையாகும். இதன்போதுசிங்கள மக்கள், பௌத்த இனவாதிகள் சந்திரிக்காவிற்கு நெருக்கடியினை கொடுத்தபோது, அரசினை வழிநடத்த முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டு, மஹிந்த ராஜபக்ஷவிடம் இவ்வரசாங்கத்தினை ஒப்படைத்தார். அதன்பிற்பாடு மஹிந்த ராஜப்க்ஷ பண்டாரநாயக்காவின் குடும்பத்தினரை ஓரங்கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதன் விளைவாக, மீண்டும் சந்திரிக்கா அவர்கள் தன்னுடைய குடும்பத்தினரை ஓரங்கட்டியதற்கு பழிவாங்கும் திட்டமாகவே கூட்டரசாங்கமாக மைத்திரிபாலவின் தலைமையில் ஆரம்பித்து அதில் வெற்றிவாகையும் சூடினார்.

கடந்த காலங்களில் சிங்கள தேசத்திலிருந்து . பல அரசியல்வாதிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு ஐக்கியமாக உறவாடியவர்கள் காணாமற்போயும். சுட்டுக்கொல்லப்பட்ட வரலாறுகளும் பதிவாகியுள்ளது. முக்கியமாக இதில் குறிப்பிடப்படவேண்டிய ஒருவர் தான் விஜயகுமாரதுங்க. இவ்வாறாக மைத்திரி அரசு தமிழ்மக்களுடன் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் அதேநேரம், இதனை சிங்கள இனவாதக்கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமா? எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. மாவிலாறில் ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் முடிவடைந்த யுத்தம் மட்டும் இனப்படுகொலை அல்ல. அதற்கு முன்னரும் எத்தனையோ படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றினையும் நாம் வெளிக்கொணர்வது சிறந்தது. தற்பொழுது அரசு கூறும் பசப்புவார்த்தைகளுக்கு அடிபணிந்து செல்வோமானால் காலப்போக்கில் தமிழ் மக்களினது வாழ்க்கை கேள்விக்குறியாக மாற்றப்படும். அரசியல் சாணக்கியம் எனக்கூறிக்கொண்டு அனைத்தையும் விட்டுக்கொடுக்கும் தன்மையோடு செயற்படுவது ஆரோக்கியமாக அமையாது. எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு சிறந்ததாக தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்கின்ற கோட்பாடுகள் அமையப்பெறுகின்றது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு எனக்கூறிக்கொண்டிருப்பது ஆரோக்கியமானதாக அமையாது. சர்வாதிகார ஆட்சிமுறையும் இலங்கைக்கு உகந்ததல்ல. இனவாதத்தினை தோற்றுவிக்கும் அரசியலும் அரசியலாக இருக்காது. தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் எனக்கூறிக்கொள்பவர்கள் மறுபக்கத்தில் இனவாதத்தினையும் தூண்டிவிடுகின்றனர். சம்பந்தன் தலைமையில் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றெடுக்க வேண்டும் என்கின்ற முனைப்புடன் அவருடைய செயற்பாடுகள் அமையப்பெற்றாலும், சிங்களதேசம் தமிழ் மக்களை ஏளனமாக பார்க்கின்றார்கள. பிரபாகரனின் போராட்டம் சர்வதேசத்தினை எட்டியிருப்பதன் காரணமாக, இலங்கையரசு தமிழ்மக்களுக்கான எந்தவித திட்டங்களையும் மேற்கொள்ள இயலாத நிலை தோன்றியுள்ளது. சர்வதேச விசாரணைகள் என்பதற்கு பதிலாக உள்ளுர் விசாரணைகள் என்கின்ற போர்வையில்தமிழ்மக்களை ஏமாற்றும்இரகசிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதே தவிர, இவ்விடயம் தமிழ்மக்களுக்கு தீர்வினைப் பெற்றுத்தரும் என்று கூறிவிடமுடியாது.

41

ஒவ்வொரு காப்பரணில் நின்ற படையினருமே தம்மாலான கடும் எதிர்ப்பைக் காட்டினர். ஆனால் நாம் வலதுபுற நகர்வைத் துரிதமாகச் செய்து கனீபாவுடன் கைகோர்க்கவேண்டும். ரோசா காயப்பட்டுவிட்டதால் இந்த அணியை வழிநடத்துவதற்காகத் தன்னோடு நின்ற தமிழ்செல்வியை விதுஷா அனுப்பினார்.

தமிழ்செல்வி வந்தபோது இனிமேல் காப்பரணைத் தாக்கத் தொடங்கியதும். நாம் நிற்குமிடத்தைநோக்கி உட்புறமிருந்து RPGக்கள் சீறிவரும். யாருமே எந்த மறைப்புக்களையும் பயன்படுத்தமுடியாமல் வெளிகளில் நின்று சண்டையைத் தொடர்ந்தோம். காப்பரண்களைநோக்கிச் சுட்டு நாம் நிற்குமிடத்தைக் காட்டிக்கொள்ளாமல் நெருங்கிப்போய்க் குண்டடித்தோம். இதில் தற்துணிவுடன் தனியொருவராகக் குண்டடித்துக் குண்டடித்துத் தாக்கி, எம்மவர்கள் பலரை இழந்தபின்னரே வால் கூட்டிவந்து விடப்பட்ட நான்கைந்து ஆண்போராளிகளையும் குறுக்காக நிலைப்படுத்தினர் சயந்தினி. பிளாட்டுன் கட்டளையதிகாரியின் தளத்தின் பாதுகாப்புக்காக அவர்கள் அமைத்திருந்த குறுக்குக் காப்பரண்வரிசையே இப்போது அவர்களுக்குத் தலைவலியாக மாறியது. இதற்குமேல் எம்மாலும் நகரமுடியவில்லை.

மேவி வந்துகொண்டிருந்த படையினர் மீது நாம் கேட்டபடி 120மி.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

கைப்பற்றவேண்டிய காப்பரண்கள் பாதைக்கு நேரே உள்ளிருந்த மாடிவீடு என்று எல்லாப் பக்கங்களிலிருந்தும் செறிவான தாக்குதல் படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்டவாறிருந்தது. படையினரின் ரவைகள் பட்டு மண் அணைமீது உயரமாக அமைக்கப்பட்டிருந்த வேலி எரியத்தொடங்க, அவர்கள் ஏவிய தேடொளி எறிகணைகள் வானில் மிதந்தவாறு ஒளியை வழங்க, எல்லாமாகச் சேர்ந்து இரவைப்பகல்போல ஆக்க,எம்மவர்களின் ஒவ்வொரு அசைவையும் தூர இருந்தே அவர்களால் கவனிக்கமுடிந்தது. எனவே முன்புறமாகமட்டுமன்றி, முன்னேறிச் சென்று கொண்டிருக்கையில் பின்புறமாகவும், பக்கவாட்டாகவும் கூடத் தாக்குதலை நாம் எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

படைத்தளம் எப்போதும் விழிப்பாக இருந்ததால், போதுமான தகவல்கள் வேவு அணிகளால் திரட்டப்பட்டிருக்கவில்லை. ரோசாவின் அணி தாக்குவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்த பகுதியில், எதிர்பாராதவிதமாக இரண்டு நாட்களின்முன் படையினருக்கும், இடம்பார்க்கப்போன எமது பொறுப்பாளர்களுக்குமிடையே சிறு சண்டையொன்று நடந்ததால், கடைசி நேரத்தில் அந்தப் பாதையைக் கைவிடவேண்டியிருந்தது. அதன் பின் முழுமையாக வேவு வேலைகள் முடிவடைந்திராத பாதையொன்றால், இடையில்ஏற்பட்ட சிக்கல்களையெல்லாம் உடனுக்குடனேயே தீர்த்துக்கொண்டு, ரோசாவின் அணி தாக்கி உள்நுழைந்தது. அவ்வணியுடனேயே சிறப்புத் தளபதி விதுஷாவும் உள்நுழைந்துவிட்டிருந்தார்.

படையினரின் காப்பரண்களின் உட்புறமாக நின்ற எங்களுக்கு விழுந்த அடியோ விவரணத்துக்கு அப்பாற்பட்டது. எங்களுடைய சுடுகலன் ஒன்று 30 ரவைகளை அடித்து முடிக்கமுன்பே எங்களை நோக்கி ஒரு RPG தேடிவரும். சுடுகுழலிருந்து ரவை புறப்படும் வேகத்தில் வெளிப்படுகின்ற தீப்பொறியே நாம் நிற்குமிடத்தைப் படையினருக்குத் துல்லியமாக இனங்காட்டிக்கொண்டிருக்கின்றது என்பதை நாம் கண்டுபிடிப்பதற்குள்ளாகவே எங்களில் பல பேர் காயமடைந்துவிட்டார்கள்.

இதன் பின்னர் ஓரிடத்தில் நின்று சுடுவதற்கு யாரையுமே விதுஷா அனுமதிக்கவில்லை. நின்று சுடுவதும், இடம் மாறுவதும் சுடுவதுமாக நாங்கள் மாறிக்கொண்டோம். எங்களின் கையில் விழுகின்ற கடைசி நிமிடம் வரை காப்பரண் ஒவ்வொன்றிலும் நின்ற படையினர் மிகக் கடுமையாகத் தாக்கினார்கள். கைப்பற்றியபின் அதற்குள் நின்று மற்றைய



எம்மால் சில காப்பரண்களைக் கைப்பற்றக்கூடியதாக இருந்தது.

மாடிவீட்டிலிருந்து வந்த கடுமையான எதிர்ப்பால், தொடர்ந்து இருபுறமும் காப்பரண்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த அணிகள் இழப்பைச் சந்தித்துக்கொண்டிருந்தன. இதனால் காப்புச்சூடு வழங்கிக்கொண்டிருந்த மாதினியின் 50 கலிபர் வரவழைக்கப்பட்டு, எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது. இடதுபுறக் காப்பரண்களைத் தாக்கியவாறு போய்க்கொண்டிருந்த காவேரி ஒரு கட்டத்துக்குமேல் நகர முடியாமல் விதுஷாவோடு தொடர்புகொள்ள, அதுவரை பாதையருகே நின்ற 50 கலிபர் அணியை உடனேயே காவேரியின் பக்கம் அனுப்பினார் விதுஷா.

முன்னரங்கின் உட்புறம் நின்று அணிகளை வழிநடத்திக்கொண்டிருந்த விதுஷா, படையினரின் RPG அடியில் காயமடைய, அவரின் வேலைகளைத் தமிழ்செல்வி பொறுப்பெடுத்தார். எதிர்ப்பு நிறுத்தப்பட்ட கணத்திலேயே தமிழ்செல்வி வலதுபுறக் காப்பரண்களைக் கைப்பற்றும் வேலையில் அணிகளை- ஈடுபடுத்தினார். முன்னரங்கோடு அமைந்திருந்த படைத்தரப்புப் பிளாட்டூன் கட்டளை அதிகாரியின் தளமொன்றை நீண்ட நேரச் சண்டையின்பின் கைப்பற்றினோம். இந்தச் சண்டையில் தமிழ்செல்வியும் காயப்பட, அணியை சயந்தினி பொறுப்பேற்றார்.

காலை 5.30 அளவில், கைப்பற்றி நாம் நிலைகொண்டிருந்த காப்பரண்களைநோக்கியும், உட்புறமாக மேவியவாறும் படையினர் எம்மைநோக்கி முன்னேறத்தொடங்க, சண்டை தொடர்ந்தது. நாம் நின்றிருந்த காப்பரண்களில் சில, படையினரிடம் கைமாறின. அடுத்தடுத்த நிலைகளில் இருதரப்பும்நின்று நெருக்கமாகச் சண்டை நடந்துகொண்டிருந்தது. தன்னுடன் எஞ்சி நின்றவர்களையும், மேஜர் விசு

மீ. எறிகணை செலுத்தியுடன் நின்ற பவநிதி துல்லியமாக எறிகணைகளை வீசிக்கொண்டிருந்தது நிலைமையை ஓரளவு கட்டுப்படுத்த உதவியது. ஆனால் பகல்நேரப் பதுங்கிச்சுடுதலில் நாம் சிலரை இழக்கநேரிட்டது.

நாம் உடைத்த பாதையைப் படைத்தரப்பினர் மூடிவிடாமல் சுதனியின் செக்சன் பாதுகாத்துக்கொண்டிருந்தது. வலதுபுறம் குறிப்பிட்ட தூரம் முன்னேறிய நிலையில், 1998.09.27 அன்றிரவு நின்ற இடங்களில் காவற்கடமையைச் செய்தவாறு நகர்வகழியில் எமது பாதுகாப்புக்காகக் கண்ணிகளை விதைத்துவிட்டு, எல்லோரும் விழித்திருந்தோம்.

ரோசா சண்டையைத் தொடக்க ஒருசில நிமிடங்களின் முன்னரே, மேஜர் கனீபாவின் தடையுடைக்கும் அணி டோபிடோவை வெடிக்கவைத்துச் சண்டையைத் தொடக்கிவிட்டிருந்தது. தடைகளை அகற்றுவதில் அவர்களுக்குக் கடுஞ்சிரமங்கள் ஏற்பட்டன. அது ஒரு முக்கிய வீதி என்பதால் எதிர்பார்க்கப்பட்ட அளவைவிட, மிகமிகக் கடுமையான பதில் தாக்குதலை கனீபாவின் அணி சந்தித்தது. ஆனால் சண்டை தொடங்கிய 30 நிமிடங்களுக்குள்ளேயே தான் இடதுபக்கம் மூன்று காப்பரண்களைப் பிடித்துவிட்டதாக கனீபாவும், வலதுபுறம் ஒரு காப்பரணைப் பிடித்திருப்பதாக அணியின் பதில் பொறுப்பாளர் மேஜர் இசையமுதும் விதுஷாவுக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

அவசரஅவசரமாகத்திரட்டப்பட்ட வேவுத் தகவல்களில் குறிப்பிடப்படாத விடயங்கள் கனீபாவின் பகுதியினுள் இருந்தன. காப்பரண் வரிசையோடே அண்மையில் ஒரு கல்வீடு இருந்தது. அந்த வீதியில் அதற்கடுத்த கல்வீடு ஆலம் விழுதுகளால் உருமறைக்கப்பட்டிருந்தது. அது அப்பகுதிக்குரிய கட்டளையதிகாரியின் பணிமனையாக மிகப்பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இருந்தது. கனீபாவின் அணியினர் முன்னரங்கப் படையினரதும், உட்பாதுகாப்புப் படையினரதும் தாக்குதலுக்கு ஒரேநேரத்தில் பதில் தாக்குதல் செய்யவேண்டியவர்களாக இருந்தனர்.

குறிப்பிட்ட நேரத்தின் பின் நான்காவது காப்பரணைப்பிடித்துவிட்டதால் ஐந்தாவதை நோக்கி நகரப்போவதாகக் கனீபாவும், மூன்றாவதைப் பிடிக்கப்போவதாக இசையமுதுவும் விதுஷாவுக்கு அறிவித்தார்கள். ஆனால் தம்முடன் வந்தவர்களில் மிகச் சிலரே எஞ்சியிருப்பதால் உதவியணி வேண்டுமென கனீபா கேட்டார்.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 219. | வீ.வே.பாமினி/பானுகா | கமலாதேவி வேலுப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 1997.08.20 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 220. | வீ.வே.உமையாள் | சுகந்தா ஞானமணி | யாழ்ப்பாணம் | 1997.08.20 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 221. | வீ.வே.குறிஞ்சி/உலகநிலா | உமாரூபி வேலுப்பிள்ளை | வவுனியா | 1997.08.20 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 222. | வீ.வே.செந்தூரா | சரஸ்வதி தங்கராஜா | திருகோணமலை | 1997.08.20 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 223. | வீ.வே.அன்புமங்கை | தமயந்தி முனியாண்டி | கொழும்பு | 1997.08.20 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 224. | வீ.வே.மாங்கனி | மாயம்மா வெள்ளைச்சாமி | கொழும்பு | 1997.08.20 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |

# பிரபாகரனின் இருப்புபற்றி கூறும் விடயங்கள் மக்கள் மனதில் எதிர்ப்பலைகளைத் தோற்றுவிக்கின்றன



உலகத்தின் ஒவ்வொரு வரலாற்றையும் மாற்றியமைத்த பெருமைமிக்க துடிப்புள்ள இளைஞர்களே வணக்கம். ஒரு வரலாற்றுப்பாதையில் எது நடக்கக்கூடாதோ அது நடந்துவிட்டது. இப்பொழுதும் தொடர்கின்றது. எமது இனம் இன்று ஒவ்வொருதிசையில் ஒற்றுமையின்றி இருப்பதற்கு முக்கியகாரணம் பழைமைவாதக்கொள்கைகளுடன் கூடிய சிந்தனையாளர்களே. அவர்களின் சிந்தனை எல்லாம் தமது சுயநல வாழ்கைக்கானதாகவே அமைந்திருக்கும். அவர்களால் எதையும் செய்யமுடியாது. பதிலுக்கு எல்லாவற்றையும் விமர்சிக்கும் பண்பே அவர்களிடம் இருக்கும். எமதருமை இளைஞர்களே! எதையும் மாற்றும் சக்தியுள்ளவர்கள் இளைஞர்களே. உங்களால்தான் ஒருவரலாற்றையே அமைக்கமுடியும். ஒவ்வொரு யுகத்திலும் வரலாற்றை மாற்றியவர்கள் எல்லோரும் இளைஞர்களாகவே இருந்தனர். எமது தேசியத்தலைவர் பிரபாகரன் கூட ஒரு இளைஞன் ஆகவே வரலாற்றை மாற்றப்புறப்பட்டார். தமிழனை நாய் என பார்த்த சிங்களவன் புலி என பயப்படவைத்தார். எனவே வரலாற்றுச் சக்கரம் வேகமாக சுழல்கின்றது. ஒரு தலைமுறையை விட்டு அடுத்த தலைமுறைக்கு இன்று போராட்டம் கைமாறுகிறது. எமதருமை தமிழ் இளைஞர்களே நீங்கள் கற்பனையைவிட்டு முதலில் உண்மை என்ன? என்பதை உணர்ந்து வெளியே வரவேண்டும்.

முதலில் முள்ளிவாய்க்காலில் என்ன நடந்தது? தலைவர் பிரபாகரனின் நிலைமை என்ன? என்று தேடுவதை முதலில் நிறுத்தி, புலி என்ற மாயையில் இருந்து வெளியே வாருங்கள். சில நேரங்களில் எல்லாமே எமக்கு எதிராக நடக்கிறது. இதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றாலும், உண்மை அதுதான் என்றால் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். முள்ளிவாய்க்காலில் என்ன நடந்தது என்பது தமிழரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் நடந்துவிட்டது. அடுத்த கணமே ஒரு கற்பனையில் இப்படி நடந்திருக்கக்கூடாதா? என்ற ஏக்கம் சாதிக்கமுடியாத கையாலாகாதவர்களிற்கு ஏற்படுகின்றது. அந்தக்கற்பனைக்கதைகள் இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது. கற்பனைக்கதைகளின் அடிப்படையில் வருவார், வருவார் என்ற நம்பிக்கையினை மக்கள் மனதினில் இன்று ஆழமாக பதியத்தொடங்கியுள்ளது. பல நூற்றாண்டுகளிற்கு முன்பு ஒரு கவிஞரால் எழுதப்பட்ட ஒரு கற்பனைக்கதையான மகாபாரதக்கதையும், உண்மைக்கு புறம்பாக திரிபுபடுத்தி எழுதப்பட்ட இராமாயணக்கதையும் இன்றும் உண்மையென்றே எல்லோரும் நம்புமளவிற்கு, தலைவர் விடயத்திலும் தமிழினம் மாபெரும் தோல்வியடைந்துவிட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், எந்த அரசிற்கெதிராக தமிழர் போராடினார்களோ, அந்த அரசிற்கு நடந்தது என்ன? நடந்துகொண்டிருப்பது என்ன? என்ற உண்மை தெரிய தமிழரோ இன்னும் புலி என்ற மாயையில் இருந்து விடுபடவில்லை.

புலிகள் வருவார்கள். மூன்றே நாளில் தமிழீழத்தை மீட்டெடுப்பர் என்ற மூன்றுநாள் கனவில் அளவிற்குமிஞ்சிய கற்பனையில் வாழ்கிறார்கள். அமெரிக்காவான அமெரிக்காவே ஈராக்கையோ, ஆப்கானிஸ்தானையோ மூன்றுநாளிற் பிடிக்க முடியாததை புலிகள் செய்வார்கள் என்றால், அமெரிக்காவைவிடவா பலமாக உள்ளனர்? உண்மையில் மஹிந்த ராஜபக்ஷவிற்கோ அல்லது கோத்தபாயவிற்கோ, சரத்பொன்சேகாவிற்கோ இறுதியுத்தத்தில் என்ன நடந்தது என்று தெரியாது என்று யாராவது சொல்லமுடியுமா? உண்மையிலேயே தலைவர் சாகவில்லையென்றால் எதற்காக ஒரு அரசிற்கெதிராக போராடிய போராளிகளை அந்த அரசே மன்னித்து விடுதலைசெய்யவேண்டும். இவர்கள் மீண்டும் சென்று தலைவருடன் சேர்ந்து விடுவார்கள் என்று ஏன் நினைக்கவில்லை? அரசியற்காரணங்களிற்காக மன்னித்தது என்றால் புலிகளின் முக்கிய உறுப்பினர்களை ஏன் விடுதலை செய்யவில்லை? சிந்தியுங்கள் இளைஞர்களே. புலிகளின் முக்கிய உறுப்பினர்களை விடுதலைசெய்தால் மறுபடியும் புலிகளை இவர்கள் ஒருங்கிணைக்கலாம் என்ற பயத்தால்தான் இன்றும் இரகசிய முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். முள்ளிவாய்க்காலில் தோல்வியடைந்தோம்.

இது நாம் எதிர்பாராத ஒன்றுதான். முடிந்தது முடிந்ததாக இருக்கட்டும். ஆனால் அடுத்தகட்ட போராட்டத்திற்கு யாரும் தயாராகக்கூடாது என்று சொல்ல யாருக்கு என்ன தகுதி இருக்கின்றது. இன்று தமிழர்களின் கேவலமான வாழ்கைக்கு தலைவர் வருவார் என்ற நம்பிக்கையும் ஒரு காரணம். முள்ளிவாய்க்கால் தோல்வியை வெறுமனே தலைவரின் தலையில் கட்டிவிடமுடியாது. இன்றைக்கு தலைவர் வருவார், வருவார் என்ற நம்பிக்கையை வெளியிடுவோர்தான் அன்றும் தலைவர் விடமாட்டார் விடமாட்டார், அவர் பார்த்துக்கொள்வார் என்று மனைவிமாரின் முந்தானையில் மறைந்திருந்தார்கள். இறுதியில் என்ன நடந்தது? ஒரு தலைவனாக என்னசெய்யமுடியும். எல்லாமே முடிந்துவிட்டது. இன்றும் அதே பல்லவி தொடர்கிறது. நேற்றுவரை தலைவரின் இருப்பில்தான் போராட்டச்சக்கரம் சுழன்றது. ஆனால் இன்று அதே தலைவரின் இருப்பில்தான் இன்று போராட்டம் தடைப்பட்டுள்ளது. தலைவர் இருக்கிறார் என்று கூறுவதன்மூலம் எதை நீங்கள் சாதிக்கப்போகிறீர்கள்? தலைவர் வெளியேறியதை ஓரளவு உறுதிப்படுத்துபவர்கள் கூட அவர் போய்சேரவேண்டிய இடத்தை அடைந்ததை உறுதிப்படுத்த முடியவில்லையே.

உயிருடன் தான் உள்ளார் என்றால் இத்தனை வருடத்தில் ஒரு சிறு அசைவுகூட ஏற்படாதது ஏன்? கடைசி வரை போராடியவர்களிற்குக்கூட என்னநடந்தது என்று தெரியாமல் இருக்க, புலம்பெயர்நாடுகளில் இருந்து புதிய புதிய கற்பனைக்கதைகள் வருகிறது. யுத்தம் முடிந்து மூன்றுமாதத்துள் அடிக்கடி நண்பர்கள் சொல்வார்கள், வன்னேரிக்காட்டுக்குள் அவரின் படை நிக்குதாம், மணலாற்றில் சண்டைநடந்ததாம், இரணைமடுவில் புலிகள் மக்களிடம் சாப்பாடுவாங்கிச்சாப்பிட்டார்களாம் என பல சுவையான கதைகள் வரும். இதெல்லாம் எங்கே இருந்து உருவாகின்றது என்றுபார்த்தால், எல்லாமே புலம்பெயர்நாடுகளில் வேலை வெட்டிஇல்லாமல் குந்திக்கொண்டு இருக்கும் சிலரின் வேலை என்பது தெரிந்தது. இவற்றின் தொடர்ச்சியே இன்றைய தலைவரும் புலிகளும் தொடர்பான செய்தி. எப்போதும் எமக்கு சாதகமான பதில் கிடைக்கும்போது மகிழ்ச்சியடைகின்றோம். அத்துடன் நிற்காது சிறிது சிறிதாக நம்ப தொடங்குகின்றோம். இச்செய்திகளை உருவாக்கியவருக்கே திரும்பவும் அதே செய்தி புதிய பரிமானத்துடன் சென்றுசேரும்போது அதை அவரும் உண்மைதான் என்று நம்புகின்றார். இதெல்லாம் எவ்வளவு முட்டாள்த்தனமானது என்பதை ஒருநாள் உணர்வீர்கள். இந்தியா தனது அரசியல் நலனிற்காக அடிக்கடி புலி புலி என பூச்சாண்டிகாட்ட நீங்களோ மகிழ்வின் உச்சத்திற்கு செல்கின்றீர்கள். உண்மையில் இந்தியாவில் புலிகளின் பயிற்சிமுகாமோ அல்லது செயற்பாடுகளோ இல்லை. இது இந்திய அரசிற்கு நன்குதெரியும். தப்பிச்சென்ற ஒரு சில உறுப்பினர்களும் தருணம்பார்த்து வெளிநாடுகளிற்கு செல்லவே முயற்சிக்கிறார்கள் தவிர, நீங்கள் நினைப்பதுபோல் எதுவும் இந்தியாவில் இல்லை.

இன்று பலர் எழுதுகின்றனர். ‘தேசியத்தலைவரின் இருப்பை மறுதலித்து வரலாற்றுத்தவறு செய்யாதீர்கள் என்றும், தாமும் தமிழ்நாட்டிலுள்ள தமிழின உணர்வாளர்கள் என்று கூறிக்கொள்பவர்களும் தலைவர் இருக்கின்றார் என்று நம்பவைக்கப்படாத பாடுபடுவதாகவும் இப்போதுதான் எல்லோரும் நம்ப ஆரம்பித்துள்ளார்கள்’ என்றும் கூறுகின்றார்கள். சரி நீங்கள் சொல்வது உண்மை என்றால் ஏன் இன்று புலிகளின் சர்வதேச கட்டமைப்பு சிதைந்து தறிகெட்டுப்போய் ஒவ்வொருவரும் மேய்ப்பவன் இல்லாத ஆட்டுமந்தைக்கூட்டம்போல் உள்ளனர். இன்றைய தமிழரின் இழிவான நிலைக்கு சுயநலத்துடன் செயற்படும் சர்வதேசப்புலிகளே காரணம். இதில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்களிற்கு சாதாரண துப்பாக்கியின் பாரம்கூட தெரியாதவர்கள்தான் இவர்கள். இன்று வீரவசணம் பேசி மக்களை ஏமாற்றி பிழையான வழியில் கொண்டுசெல்கின்றார்கள். இவர்களிற்கு ஜால்ரா போடுவதற்கென்று ஒரு கூட்டம் உள்ளது. இவர்கள எல்லோரும் தேசிய செயற்பாட்டாளர்கள், உணர்வாளர்கள் என்னும் புதியபுதிய பெயர்களில் புதிதாக முளைக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் சாதிக்கு ஒரு கட்சி. தெருவுக்குத்தெரு ஒரு கட்சி என்று உள்ளதுபோன்று, புலம்பெயர் தமிழ் சமூகத்திலும் புதிய புதிய பெயர்களில் துதிபாடும் கூட்டங்கள் முளைவிடத் தொடங்கிவிட்டது. முள்ளிவாய்க்காலிற்கு முன் இருந்ததுபோலவா இன்று சர்வதேச கட்டமைப்பு உள்ளது? தலைவர் சர்வதேச புலிகளுடன் தொடர்புகளைப்பேணி இன்னும் இரகசியமாக கரும்புலிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்? நீங்கள் சொல்வதைப்போல் முக்கிய தளபதிகள், பல ஆயிரம் போராளிகளும் தலைவருடன் இருக்கின்றார்கள் என்றால், சரணடைந்த போராளிஞும், தளபதிகளும் தவிர்த்துப்பார்த்தால் ஆனந்தபுரத்தில் வீரச்சாவடைந்த தளபதிகள்தான் உள்ளனர். இது தவிர இறுதிநாட்கள் சமரில் வீரச்சாவடைந்த தளபதிகள், அதையும்விட விரல்விட்டு எண்ணும் ஒரு சில தளபதிகள் சரணடையாது மக்களுடன் மக்களாக இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்கு வந்து பின்னர் வெளிநாடுகளிற்கு தப்பிச்சென்று தனிப்பட்ட பொது வாழ்க்கையில்தான் ஈடுபடுகின்றார்கள். இவர்கள் எல்லோரையும்விட நீங்கள் சொல்லும் முக்கிய தளபதிகள் பலர் யார்? பல ஆயிரம் போராளிகள் யார்? மக்கள் மத்தியில் ஒரு பேச்சு உள்ளது. அது பிரபாகரன் போல் இரண்டுபேர் உள்ளனராம். அதில் வெளியே திரிபவர் உண்மையான பிரபாகரன் இல்லையாம் என்று.

இது தான் உங்களின் வாதமுமா? ஆனால் தளபதிகளும் இரண்டு இரண்டுபேர் எப்படி இருந்தார்கள். வன்னியில் குளோனிங் தொழில்நுட்பம் அவ்வளவு வளர்ச்சியடைந்தா இருந்தது? கடைசிவரைக்கும் தப்பிப்போகும் அணிதொடர்பாக தளபதி ரமேஸ் அண்ணனிற்கோ அல்லது தளபதி சொர்ணம் அண்ணனிற்கோ, அரசியற் பொறுப்பாளர்களிற்கோ, சரணடைந்த தளபதிகளிற்கோ எப்படி தெரியாமல்போனது? ஆனால் இன்று சர்வதேச புலிகளிற்கு எது உண்மை என்பது தெரியும். ஆனால் சொல்லமாட்டார்கள் அது அவர்களின் வயிற்றுப்பிழைப்பிற்கு ஆபத்து. இன்னும் எவ்வளவு காலத்திற்கு தமிழரின் தலையில் மிளகாய் அரைக்கப்போகின்றார்கள். ஒன்றுமட்டும் கூறிவைக்கவிரும்புகின்றேன் நீங்கள் சொல்லும் கதைகள் தமிழீழத்திற்கான இராணுவபலத்தை பூச்சியம்(0) என்ற நிலைக்குத்தான் கொண்டுபோயுள்ளது. சிலர் தெரிந்தாலும் சொல்ல மறுக்கிறார்கள். யாரும் யதார்த்த நிலையை உணர மறுக்கிறார்கள். ஒரு வேளை தலைவர் நோயினால் யுத்த களத்திற்குவெளியே மரணித்திருந்தால்கூட நீங்கள் சிங்கள அரசிற்கு எமது பலவீனத்தை காட்டாது மறைக்கலாம். ஆனால் அவனிற்கு எல்லா உண்மைகளும் தெரியுமே. இனியும் எதற்காக ஏமாற்றுகிறீர்கள். இதேவார்த்தையைத்தான் இன்னும் 25 வருடம் கடந்தாலும் சொல்வீர்கள். தலைவர் வருவார் என்று. இதில் ஐயா நெடுமாறனும் இணைந்துகொண்டதுதான் வேதனையாய் இருக்கிறது. இருந்தாலும் உங்களை மதிக்கிறோம். உங்கள் வயது உங்களை நம்பவைத்துவிட்டது. அவர் சொல்கின்றார் தலைவர் உயிருடனும், நலமுடனும் இருக்கின்றார். மீண்டும் வருவார். ஐந்தாம் கட்ட ஈழப்போரை நடத்துவார்.

அத்துடன் நின்றுவிடாது குறிப்பாக சுவிஸ்லாந்து நாட்டில் வாழ்கின்ற தமிழ்மக்களே! உங்களை உரிமையுடன் கேட்கிறேன் என்று கூறுகின்றார் என்றால் தலைவர் சுவிஸில் வாழ்கின்றாரா? அப்படி வாழ்வதானால் இதைசொல்வது துரோகம் அல்லவா? அப்படியிருந்தும் சொல்லியிருக்கின்றார் என்றால் அதில் உண்மை இருக்குமா? நாளை எல்லாமே பொய் என்றாகும் போது எல்லோரும் வரலாற்றுத் தவறை சுமந்தவர்களாக கூனிக்குறுகி தமிழர்கள் மத்தியில் நம்பிக்கை இழந்தவர்களாகவே இருப்பர்.

அந்தநேரத்தில் அவர் சொல்லித்தான் நான்சொன்னேன் என்ற குற்றச்சாட்டையே மாறிமாறி கூறப்போகின்றார்கள். தலைவருக்கு இப்போது அதாவது 2011ல் வயது 57. ஆசியாவில் ஒரு சாதாரண மனிதனின் ஆயுட்காலம் அண்ணளவாக ஒரு 80 வயதுதான். இதில் எமது போருடன் கலந்த வாழ்க்கைக்கு இன்னும் குறையும். அத்துடன் தலைவருக்கு இருந்த சில உடல் நோய்கள் அதிகபட்சம் 75 வயது வரை வாழமுடியும் என வைத்துக்கொள்வோம் அதன்பின்? இந்த உலகத்தில் பிறந்த அத்தனை பேரும் ஓர் நாள் இறக்கத்தான் வேண்டும்.

இதிலிருந்து யாரும்தப்பமுடியாது. தலைவரும் ஓர்நாள் இறக்கநேரிடும். அது நிகழ்ந்ததாக இருக்கட்டுமே. ஒரு மனிதனாக பிறந்து கிட்டத்தட்ட 40 வருடத்திற்குமேல் மக்களிற்காக போராடிய மாவீரனாக மரணித்த மகத்தான பிறவியாக நாம் கருதவேண்டும். மீண்டும் மீண்டும் தலைவர் தொடர்பான மற்றவர்களை முட்டாளாக்கும் கதைகளை வெளியிடுவதன் மூலம் நாம் தலைவர்மேல் வைத்திருக்கும் மரியாதையைத்தான் இழக்கநேரிடும். இறுதிக்கட்ட யுத்தத்தில் நடந்த துரோகங்கள் ஓர்நாள் வெளியே வரும்.

தொடரும்...

சுழியோடி

# திருகோணமலையில் கோத்தா கடற்படை முகாமில் 700க்கு மேற்பட்ட சரணடைந்த போராளிகள் -MP சுரேஸ்



திருகோணமலை கடற்படை முகாமில் உள்ள இரகசிய முகாமொன்றில் 700பேர் தடுத்து வைக்கப்பட்டு அந்த முகாமுக்கு கோத்தா முகாம் எனப் பெயரிடப்பட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்ற போது தெரிவித்த தகவலானது நாட்டிலும், சர்வதேச அளவிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐ.நா. சபையின் மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடர் தொடங்கவிருக்கின்ற காலங்களிலெல்லாம் இவ்வாறான பரபரப்பான தகவல்களும், அதிர்ச்சிதரும் செய்திகளும் வெளிவருவது இலங்கையரசாங்கத்துக்கு பாரிய சவால்களை உண்டு பண்ணியிருக்கிறது என்பது கடந்த கால அனுபவங்களைக் கொண்டு அறிய முடியும்.

2012ஆம் ஆண்டு ஒக்டோபரில் மனித உரிமை மாநாடு நடைபெற்ற வேளையில் (மனித உரிமைப் பேரவையின் பூகோள கால மீளாய்வுக்கூட்டத் தொடர்) 31.10.2012 இல் நடைபெற்ற வேளையில் அனைத்து மனித உரிமை ஆர்வலர்களும், சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் 100பேருக்கு மேற்பட்டோரும், 50க்கு மேற்பட்ட அமைப்புக்களும் கலந்து கொண்டிருந்த வேளையில், மன்னாரிலிருந்து மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் தொலைத் தொடர்பு மூலம் (ஸ்கைப்) தெரிவித்த கருத்தும் தகவலும் மனித உரிமை ஆர்வலர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் உலகத்தையே ஜெனிவாப் பக்கம் திரும்பிப்பார்க்க வைத்தது.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது காணாமல் போனோர் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர். இந்த காணாமல் போன தமிழ்மக்கள் தொடர்பில் இலங்கை அரசு இதுவரை பொறுப்புக் கூறவில்லை. சரணடைந்த போராளிகள், மீள்குடியேற்றம், மனித உரிமை மீறல்கள், காணிப்பறிப்பு போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு மீது அவர் சுமத்தியது இலங்கையரசுக்கு பாரிய நெருக்கடியை உருவாக்கியிருந்தது. அது மட்டுமன்றி பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா மீது இக்காலப் பகுதியில் கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணை இலங்கையரசாங்கத்துக்கு சங்கடமான சூழ்நிலையை உருவாக்கியிருந்தது. இது போன்றதொரு இன்னுமொரு நெருக்கடியை இலங்கையரசாங்கம் சந்தித்த ஆண்டாக கருதப்படுவது 2013 ஆம் ஆண்டாகும். மனித உரிமை மாநாடு ஜெனிவாவில் நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன். சனல் 4 வினால் வெளியிடப்பட்ட விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சித் தொகுப்பாளர் இசைப்பிரியாவின் காணொளிக்காட்சி உலகத்தையே உலுக்கியது.

இக்காணொளியைப் பார்த்த பெண்ணிய அமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும் சினம் கொண்டு கர்ச்சித்தன. கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற (03.03.2014 - 28.03.2014) ஜெனிவா மனித உரிமை மாநாட்டின் போது இலங்கையின் நன்மதிப்பை கெடுக்கும் இரு சம்பவங்கள் பதியப்பட்டன. இது நேரடியாகவே இலங்கையின் மனித உரிமை மீறல் பற்றிய சுட்டிக்காட்டலாக அமைந்தது. அதில் ஒன்றுதான் சனல் 4 வினால் வெளியிடப்பட்ட கொலைக்களம் என்னும் ஆவணப்படம். மற்றது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் ஜெனிவா மனித உரிமை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்ட 160 பக்கம் கொண்ட அறிக்கை. இந்த அறிக்கையில் இலங்கையில் முஸ்லிம்கள் எதிர் கொள்கின்ற பல்வேறு பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டு இலங்கையிலுள்ள இனவாத அமைப்புக்களாலும், ஒரு சில பௌத்த குருமார்களினாலும் பள்ளிவாசல்களுக்கும், மதப் பண்பாடுகளுக்கும் இழைக்கப்பட்டு வரும் கொடுமைகள் பற்றி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையாக அது இருந்ததாகக் கூறப்பட்டது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலி அமைப்பின் தலைவரின் மகன் பாலச்சந்திரனின் படுகொலை சம்பந்தமான விவரணப் படம் போன்றவை கடந்த வருடம் ஜெனிவாவின் அக்கினி சாட்சியங்களாக இருந்த நிலையில்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் திருகோணமலை கோத்தா முகாம் சம்பந்தமான அறிக்கை அதிர வைக்கும் தகவலாக வெளிவந்துள்ளது. முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபயவின் பெயருடன் திருகோணமலையில் கடற்படை முகாமில் 700 பேர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன், 35க்கு மேற்பட்ட குடும்பங்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

ஜெனிவா மனித உரிமை பேரவை மாநாடு எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கின்ற வேளையில் இப்பரபரப்பு ஊட்டும் தகவல்கள் வெளிவந்துள்ளன. இலங்கையில் இனக்கலவரம் வெடித்ததாக கூறப்படும் 1983 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து கடந்த 2012 ஆம் ஆண்டு வரையுள்ள சுமார் 30 வருட கால வரலாற்று அடையாளங்களில் திருகோணமலைப் பிரதேசமானது ஒரு கொலைக் களமாகவே பார்க்கப்பட்டு வந்துள்ளது என்பதற்கு இந்த முப்பது வருட கால பதிவுகள் சாட்சியங்களாக நிற்கின்றன. திருகோணமலையில் 1983 ஆம் ஆண்டுக்குப் பின் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள், மனித உரிமை மீறல்கள் உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்பதற்கு அக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களே சாட்சியங்களாக அமைந்து காணப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி யாழ். திருநெல்வேலியில் வைக்கப்பட்ட கண்ணிவெடி காரணமாக 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதன் எதிரொலியாக கொழும்பு- திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர். திருகோணமலையில் ஏராளமான கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. திருகோணமலை சிவன் ஆலயத்தின் தேர் எரித்து நாசம் செய்யப்பட்டது. ஆலயத்தின் அருகில் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலைக்கு குண்டு மழை பொழியப்பட்டது. இச் சம்பவம் நடைபெறுவதற்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன் (20.04.1983) கிளிவெட்டியைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி நவரத்தினராசா என்பவர் கிளிவெட்டியிலிருந்து கைது செய்யப்பட்டு குருநகர் முகாமில் வைத்து சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இந்த தொடக்கத்தினைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு சம்பவங்கள் நடந்தேறின. வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆகக் கூடுதலான உயிர்களை முதல் முதல் பறிகொடுத்த கிராமமாக மூதூர் கிளிவெட்டிக் கிராமம் என்பதை அப்போதைய புள்ளி விபரப் பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

1986 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி கிளிவெட்டிக் கிராமத்தை அண்டியுள்ள கிராமமான தெஹிவத்தை கிராமத்திலிருந்து இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் கிளிவெட்டிக் கிராமத்துக்கு வந்தவேளை இவர்களும், இவர்களுடன் வந்த இன்னும் சிலரும் தாக்கப்பட்டதன் எதிரொலியாக, இரு பெண்கள் உட்பட 36 பேர் கிளிவெட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பதைபதைக்கக் கொல்லப்பட்டார்கள். இதன் அடுத்த கட்ட திரை அரங்கேற்ற காட்சியாக 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி மல்லிகைத் தீவு, பாரதிபுரம், பெரிய வெளி மணற்சேனை, மேன்காமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 44 பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அன்றைய தினம் காலை (16.07.1986) மல்லிகைத்தீவு சந்தியில் கண்ணி வெடியில் இராணுவம் கொல்லப்பட்டதை பழி தீர்க்கும் முகமாக, பெரிய வெளி பாடசாலையில் முகாமிட்டு தங்கியிருந்த அப்பாவி பொதுமக்கள் 44 பேர் கொல்லப்பட்டனர்.

இதில் இரு குழந்தைகள் கூட துப்பாக்கி ரவைக்குப் பலியாகினர். பால்மணம் மாறாத சிறுமிக்கு முன்னால் அவளின்தாய் உட்பட்ட இரு பெண்கள் பாலியல் வன்மத்துக்கு ஆளாக்கப்பட்டு, 7 ஆண்களும் இரு பெண்களும் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உப்புவெளிச் சந்தியில் நடைபெற்றது. திருகோணமலை நகரத்திலிருந்து நிலாவெளிக்கு செல்லும் பிரதான பாதையை இணைக்கும் 3 ஆம் கட்டைச் சந்தியில் அந்தப் பயங்கரப் படுகொலை நடந்தது. குறித்த அன்றைய தினம் 11 பேர் கைது செய்யப்பட்டு 3 ஆம் கட்டை சந்தியிலுள்ள ஆட்கள் இல்லாத வீட்டில் அடைத்து வைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதுடன், அங்குள்ள மலசலகூட புதைகுழிகளில் முகம் தெரியாத வண்ணம் அசிட் ஊற்றி புதைக்கப்பட்டிருந்தனர். பத்து பேர் படுகொலை செய்யப்பட்ட போதும் ஒருவரின் உடல் அடையாளம் காணப்படவில்லை.

1985 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் திகதி குச்சவெளி பிரதேச பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதன் எதிர் விளைவாக, திரியாய் கிராமத்தில் குடியிருந்த தமிழ் மக்களின் 1500க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. (05.06.1985) இக்கொடூரத்தின் காரணமாக அகதிகள் ஆக்கப்பட்ட சுமார் 3000க்கும் மேற்பட்ட திரியாய்க்கிராம மக்கள் திரியாய் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மூன்று முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். 10.08.1985 ஆம் நாள் முகாமிலிருந்த 8 பேர் பஸ் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டு திரியாய் கிராமத்திலிருந்து ஹொமரங்கடவல என்னும் கிராமத்துக்கு செல்லும் இடைக்கிராமமான கல்லம்பத்தை என்ற கிராமத்தில் வைத்து கொல்லப்பட்டுள்ளனர். அன்றைய தினம் காலையிலேயே கல்லம்பத்தை கிராமவாசிகளான நான்கு பேர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்கள். இது திரியாய் படுகொலையென பதிவு செய்யப்பட்டது.

2000 ஆம் ஆண்டுக்குப் பின் போர் உக்கிரமடைந்த நிலையில் திருகோணமலையில் மனித உரிமை மீறல்கள் உக்கிரம் பெற்றுக்காணப்பட்டது என்பதற்கு இக்காலத்தில் நடைபெற்ற படுகொலைகள், காணாமல்போனோர், கடத்தப்பட்டோர் என்ற பட்டியல்கள் நீண்டு கொண்டே போகின்றது. 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற மாணவர் படுகொலைச் சம்பவமானது திருகோணமலையை மாத்திரமன்றி உலகத்தையே கதிகலங்க வைத்த சம்பவமாக இருந்தது. 2006.01.02 ஆம் திகதி திருகோணமலை கடற்கரையில் வைத்து 05 மாணவர்கள் துப்பாக்கிதாரிகளால் படுகொலை செய்யப்பட்டார்கள். தங்கத்துரை சிவானந்தா, ச.சஜேந்திரன், மனோகரன் ரஜீகர், லோ. ரொகாந்த், போ.ஹேமச்சந்திரன் ஆகிய ஐவர் படுகொலை செய்யப்பட்டார்கள். இவர்களின் கொலையின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதைக் கண்டு பிடித்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை,

இந்த படுகொலை உட்பட்ட ஏனைய மோசமான மனித உரிமை மீறல் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை கூட வெளிப்படுத்தப்படவில்லையென தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய இரா. சம்பந்தன் 2013 பெப்ரவரி 27 ஆம் திகதி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் குழு அறை 14ல் உரையாற்றிய போது எடுத்துக்காட்டியிருந்தார். இதுபோல் முன்னாள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் எச்சரிக்கையைத் தொடர்ந்து அதிரடிப் படையைச் சேர்ந்த 12 பேர் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்றில் (2013 ஆம் ஆண்டு) ஆஜர்படுத்தப்பட்டனர். ஏழு வருடங்களுக்குப்பின்னே இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த மாணவர்களின் படுகொலையின் பின்னணியாளர் யார் என்பது உலகறிந்த விடயமாகும்.

இதேயாண்டு (2006) இன்னுமொரு கோரமான மனித உரிமை மீறல் சம்பவம் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்றது. அது தான் தொண்டர் நிறுவனப் பணியாளரின் படுகொலையாகும். 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 04 ஆம் திகதி பிரான்ஸ் தேசத்தின் தொண்டர் நிறுவனமான அக்ஷன் பாம் நிறுவனத்தில் கடமையாற்றிய 17 தொண்டர்கள் மூதூரில் வைத்து கொல்லப்பட்டார்கள். நான்கு பெண்களும், 13 ஆண்களும் பலியாக்கப்பட்டார்கள். மாவிலாறு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்களுக்கு தொண்டாற்ற வந்த மேற்படி தொண்டர்களே அலுவலகத்துக்கு வெளியே கொண்டுவரப்பட்டு குப்புற படுக்க வைத்து பின் பக்கமாக தலையில் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். 2006 ஆம் ஆண்டு ஒரு அபத்தமான ஆண்டு என வர்ணிக்கப்படுகிற அளவுக்கு இன்னும் பல சம்பவங்கள் திருகோணமலையில் நடந்ததை பல்வேறு சம்பவங்கள் நினைவுபடுத்துகின்றன.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஆலங்கேணியென்னும் தமிழ்க் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான காந்தன் சித்திரா (40) என்ற குடும்பப் பெண் 02.07.2006 ஆம் ஆண்டு இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம்நடைபெற்ற மறுநாள் 03.07.2006 இல் அனுராதபுர சந்தியில் வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த ஆறு படையினர் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டனர். 14பேர் படுகாயம் அடைந்தனர். 07.07.2006 கணேஷ் லேனில் முஸ்லிம் மீனவரும், 23.05.2006 கனகசபை சந்திரன் என்ற மீன்வியாபாரி கட்டைப்பறிச்சான் சோதனைச் சாவடியிலும், 23.07.2006 இல் ஈச்சிலம்பற்று பூநகர் கிராமத்தைச் சேர்ந்த நாகராஜா சுந்தரலிங்கம் (24), 20.08.2006 ஆம் திகதி சொர்ணம் என்பவரின் சகோதரர் மக்ஹேய்சர் ஸ்ரேடியத்துக்கு அருகில், 14.09.2006 இல் அரச ஊழியர் ஒருவர், 2006.11.07இல் மூன்று இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் செல்வநாயகபுரம் கொலை, ஆத்தி மோட்டைக் கொலையென இவ்வாண்டில் பல்வேறு அசம்பாவிதங்கள் நடந்திருந்தன.

தொடரும்...

# போர்க்குற்ற விசாரணை, இனவழிப்பு என்றால் என்ன?

ஈழத்தமிழர்களுக்கெதிராக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டது இனவழிப்பு என்று கூறுவதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. இனவழிப்பு என்றால் என்ன? என்று முதலில் பார்ப்பது சிறந்தது. அதன்படி இனவழிப்பை அல்லது இனப்படுகொலையை ஆங்கிலத்தில் (Genocide) என்று அழைப்பார்கள். ஒரு தொகுதி இன மக்களை அவர்கள் ஒரு இனத்தினைச் சார்ந்தவர்கள் என்பதற்காகவோ அல்லது ஒரு மதத்தை சார்ந்தவர்கள் என்பதற்காகவோ முழுமையாக அல்லது பகுதியாக அவர்களை அழிப்பதை அல்லது அழிக்க முற்படுவதை இனவழிப்பு என்று உலகம் வரையறைப்படுத்தியுள்ளது.

ஒரு தொகுதி மக்களை கொலை செய்வது, உடல் ரீதியாக துன்புறுத்துவது, அந்த இனத்தின் வாழ்க்கை முறைக்கு இடையூறு செய்வது, அந்த இனத்தின் இனப்பெருக்கத்தை தடுக்க முற்படுவது, அந்த இனத்தின் பிள்ளைகளை பலவந்தமாக வேறு இனத்திற்கோ அல்லது மதத்திற்கோ மாற்ற முற்படுவது. இவையணைத்தும் ஒரு இனவழிப்பு என்று தான் ஐ.நா சபை வரையறை செய்திருக்கின்றது.

ஒரு தொகுதி மக்கள் ஒரே மதத்தை உடையவர்கள் என்ற ஒரே யொரு காரணத்திற்காக அந்த இனத்திற்கெதிராக படுகொலை களைச் செய்வது, நீதிக்குப்புறம்பான கொலைகளைச் செய்வது, பாலியல் வல்லுறவுபுரிவது. கடத்தல்கள், சித்திரவதைகள் இவைகள் அனைத்துமே ஒரு இனவழிப்பின் நியதிகளாக வரையறைசெய்யப்பட்டுள்ளது. இனவழிப்பு என்கின்ற விடயம் தொடர்பில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டாலும் 1948 ஆம் ஆண்டளவில்தான் இனவழிப்பு என்றால் என்ன? என்பது பற்றியும், இனவழிப்பு என்று எவ்வாறு கூறுவது என்பது பற்றியும், இவற்றினைச் செய்தவர்களுக்கான தண்டனைகள் பற்றியும் ஐ.நா சபையினால் வரையறுக்கப்பட்டது எனலாம்.

இவ்வாறான குற்றங்களை மேற்கொள்பவர்கள் சர்வதேச ரீதியில் பாரிய குற்றத்தினை விளைவித்தவர்களாகவும், தீண்டத்தகாதவர்களாகவும் பார்க்கப் படுகின்றார்கள். இனவழிப்பு என்பது ஒரு சர்வதேச குற்றம். இந்தக் குற்றத்தினை இலங்கையரசு செய்துள்ளதா? தமிழர்களின் மீதான தாக்குதல்களும் அழித்தொழிப்பும் உண்மையில் ஒரு இனவழிப்பு தானா? இதற்கு முன்னர் உலகத்தில் நடந்த மிக மோசமான இனவழிப்புக்கள் பற்றிப் பார்ப்பது சிறந்தது.

உலக வரலாற்றில் ஒரு இனத்தால், ஒருமதத்தினரால் அந்த இனம் முற்றாக அழிக்கப்பட்டு, மங்கோலியர்கள் ஒரு நாட்டின் மீது படையெடுத்து ஒட்டுமொத்த ஆண்களை கொலை செய்த வரலாறுகள் இருக்கின்றன. பிடிக்கப்படுகின்ற ஆண்களின் கண்கள் தோண்டப்பட்டு, அவர்களை குருடர்களாக்கி, சித்திரவதைகள் மேற்கொண்டு, முடவர்களாக்கி அவர்களது வாழ்வாதாரங்களை சின்னாபின்னமாக்கிய வரலாறுகள் எழுதப்பட்டிருக்கின்றன.

வெள்ளையர்கள் அமெரிக்காவில் கால்பதித்தபோது செவ்விந்தியர்களை குடும்பங்குடும்பமாக அழித்து தமக்கு எதிர்ப்பு வராதபடி நடந்துகொண்டதையும் வரலாறுகளில் காணமுடிகின்றது. அவுஸ்திரேலிய நாட்டிலும் கூட பல இனவழிப்புக்கள் நடைபெற்றதாக அந்தநாடே தற்பொழுது ஒப்புக்கொண்டுள்ளது. இஸ்லாமியர்கள் வடஇந்தியாவின் மீது படையெடுப்புக்களை மேற்கொண்டபோது அவர்கள் ஆக்கிரமித்த இடங்களில் இருந்த ஆண்களையெல்லாம் கொலைசெய்து, பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி அவர்களை சிறைகளில் அடைத்துவைத்து இனவிருத்தியை இந்தியாவில் உருவாக்கிய மிகமோசமான வரலாற்றையும் பார்க்கக் கூடியதாகவிருக்கின்றது. ஆனால் 20 நூற்றாண்டில்தான் உலகத்தால் இனவழிப்பு என்பது குற்றமாக



பார்க்கப்பட்டது. ஒரு இனத்தை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் அந்த இனத்தை சார்ந்தவர்களை முழுமையாக அல்லதுபகுதியாக அழிப்பதை இனவழிப்பு என உலகம் ஏற்றுக்கொண்டது.

20ஆம் நூற்றாண்டின் பின்னர் இடம்பெற்ற உலக இனப்படுகொலைகளில் இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆர்மேனியச்சமூகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மிக மோசமாக இனவழிப்பு பற்றி பார்ப்பது சிறந்தது. (The Armenian Genocide) ஆர்மேனியச் சமூகம் மீதான அந்த இனவழிப்பானது தற்போது துருக்கி என அழைக்கப்படுகின்ற ஒட்டோமான் இராஜ்ஜியத்தில் இடம்பெற்றிருந்தது. 3000 வருடங்களாக வாழ்ந்து வந்த 02 மில்லியன் ஆர்மேனியர்களை கொலை செய்தும், இனப்படுகொலைக்கு உள்ளாக்கி, அவர்களின் வாழ்விடங்களில் இருந்து அவர்களை அகற்றியும் அந்த இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஆசியாவில் மத்தியக்கிழக்கிற்கு தெற்காக சுமார் 3000 ஆண்டுகளாக வாழ்ந்துவந்த ஒரு இனம் தான் ஆர்மேனியர்கள். ஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசியாக்கண்டங்களை எல்லைகளாகக் கொண்டமைந்திருந்ததுதான் இவர்களின் தேசம். இந்த ஆர்மேனியர்களின் நாடும். அதன் மக்களும் சிறந்த கல்வியறிவினையும், வாழ்க்கை முறைகளையும் பின்பற்றி வாழ்ந்துவந்தார்கள். அப்போது இவர்களின் மீது பல இராச்சியங்கள் ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டிருந்தன. அந்த வகையில் இந்த ஆர்மேனிய மக்களும், அவர்களின் தேசமும் பாரசீயர்களாலும், கிரேக்கர்களாலும், ரோமானியர்களாலும், அரேபியர்களாலும், மொங்கோலியர்களாலும் மாறிமாறி ஆட்சிசெய்யப்பட்டு வந்தது.

இதுபோன்ற பல்வேறு ஆக்கிரமிப்புக்களை ஆர்மேனியர்கள் எதிர்கொண்ட போதிலும், அந்த மக்கள் தமது கலாசாரத்தினையும், விழுமியங்களையும் இறுதி வரை பாதுகாத்தனர். உலகத்தின் முதலாவது கிறிஸ்தவ தேசிய இனம் என்று தமது இனத்தினை பிரகடனம் செய்துகொண்ட பெருமை இவர்களுக்கு இருக்கின்றது. சமாதானமும், சாந்தியும் நிறைந்த நாடாகவும், கலை கலாசாரத்தில் முக்கியமானதும், கட்டடக்கலை, வர்த்தகம் போன்ற பல துறைகளில் இந்த ஆர்மேனிய நாடு வளர்ச்சிபெற்றிருந்தது.

கி.பி.10ம் நூற்றாண்டில் ஆர்மேனியர்கள் தமது நாட்டிற்கு தலைநகரமாக் அனி என்ற பிரதேசத்தினை தெரிவுசெய்தனர். இந்த தலைநகர் 1007 தேவாலயங்களின் நகர் 'என்று அழைக்கப்பட்டது. இவ்வாறாக சமாதானம். பொருளாதார வளர்ச்சி என ஆர்மேனியர்கள் இருந்தபோதுதான் அவர்களின் வரலாற்றில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்பட்டது. 11வது நூற்றாண்டில் இந்த நாட்டினை துருக்கி ஆக்கிரமித்தது. இதனைத்தொடர்ந்து பலவருடங்களாக இஸ்லாமியர்களின் ஆக்கிரமிப்பிற்குள் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. 16ம் நூற்றாண்டில் துருக்கியின் ஒட்டோமான்



இராஜ்ஜியத்திற்குள் உள்வாங்கப்பட்டது.

துருக்கியின் ஒட்டோமான் என்பது 10 நூற்றாண்டில் மிக பலம் வாய்ந்த இராஜ்ஜியமாகும். தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும் பகுதிகளையும், வடஆபிரிக்காவின் மத்திய கிழக்கு அனைத்து இடங்களையும் தலைநகராகக்கொண்ட மிகப்பெரிய இடமாகவே துருக்கியின் ஒட்டோமான் பேரரசு அமையப்பெற்றிருந்தது. சுமார் 4 நூற்றாண்டுகள் துரித வளர்ச்சியில் இருந்த இந்த ஒட்டோமான் பேரரசு, 1800ம் ஆண்டளவில் பலத்த சவாலை எதிர்கொள்ளவேண்டியேற்பட்டது.

இந்த காலகட்டத்தில்தான் ஐரோப்பிய நாடுகள் தொழிற்துறையில் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டிருந்தன. யுத்தத்தில் நவீன உத்திகளை கையாண்டு முன்னேற்றம் காண ஆரம்பித்தனர். ஐரோப்பிய நாடுகளின் வளர்ச்சியினால் தாக்குப்பிடிக்க முடியாமல் போன இந்த ஒட்டோமான் இராஜ்ஜியம் பலமான சிதைவுகளுக்குள்ளானது. தொடர் தோல்விகளை சந்திக்கநேர்ந்தது. இதன் விளைவாக கிரேக்கம், சோபியா, ருமேனியா உட்பட பல நாடுகள் தமது சுதந்திரத்தினைப் பெறும் நிலை உருவானது.

இறுதியாக ஒட்டோமான் இராஜ்ஜியத்தில் அரேபிய நாடுகளும், ஆர்மேனிய நாடும் தான் எஞ்சியிருந்தன. மிகவும் ஏழ்மையான அந்த இராஜ்ஜியத்தை சுல்தான் அப்துல் ஹமீட் என்ற மன்னரே ஆட்சிசெய்துவந்தார். வறுமை, அடக்குமுறை, பாரபட்சம் இப்படி சிக்கித்தவித்த ஆர்மேனிய இனம் துருக்கி அரசிடம் சுதந்திரத்திற்கான கோரிக்கைகளை முன்வைத்தனர். 1890ஆம் ஆண்டு ஆர்மேனிய இளைஞர்கள் அரசியல், வாக்களிப்பு உரிமைகள் வழங்கப்படவேண்டும் எனக்கூறியும், இரட்டைவரி முறை நீக்கப்படவேண்டும் என்கின்ற கோரிக்கைகளை முன்வைத்தும், பாரிய அழுத்தங்களை துருக்கியின் மீது பிரயோகிக்க ஆரம்பித்தனர். இதன் காரணமாக ஆர்மேனியர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க துருக்கி ஆரம்பித்தது.

இக்கோரிக்கைகளுக்கு சுல்தான் அப்துல் ஹமீட் கொடூரமான முறையில் பதிலளித்திருந்தார். இவர் ஆர்மேனியர்களை அழிக்கும் நடவடிக்கையில் இறங்கியிருந்தார். 1894-1896 வரை ஆர்மேனிய கிராமப்பகுதிகளுக்குள் நுழைந்த படைகள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஆர்மேனியர்களை கொலை செய்தார்கள். இச் சம்பவம் 19ம் நூற்றாண்டில் நடந்தது. 20ம் நூற்றாண்டில் துருக்கி அரசில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றம் ஆர்மேனியர்களது வாழ்க்கையிலும் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியது. சுல்தான் காலத்தில் இருந்த உயர் இராணுவ அதிகாரிகள் அவரை அகற்றிவிட்டு இராணுவ ஆட்சியை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து இந்த ஆட்சியைமூன்றுதுருக்கிய இளைஞர்கள் கைப்பற்றினார்கள். 1913ம் ஆண்டில் புதிய துருக்கியை உருவாக்கும் முயற்சியில் மூன்று இளைஞர்கள் ஈடுபட்டார்கள். அவர்களின் ஆட்சியில் பல புதிய விடயங்களை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருந்தனர். தங்களது நடைமுறையில் ஒரே மொழி இருக்கவேண்டும் என முடிவெடுத்தனர். ஆனால் அந்த குறிக்கோளை அடைவதில் ஒரு சிக்கல் இருந்தது. அதுதான் துருக்கியில் இருந்த ஆர்மேனிய தேசிய இனமும், அவர்களது வாழ்விடங்களும், துருக்கியின் மொத்த சனத்தொகையில் 10 வீதமாகவிருந்த ஆர்மேனியர்களின் இருப்பு என்பது, புதிய இஸ்லாமிய விஸ்தரிப்பின் கனவை தடுத்துநிறுத்திவிடும் என்று அச்சம் கொண்டார்கள்.

இஸ்லாமிய நாடொன்றுக்கு இவர்கள் பாதகமாக அமைவார்கள் என்று துருக்கிய இனத்தவர்கள் கருதினார்கள். அப்போது 40.000 ஆர்மேனியர்கள் இராணுவத்தில் இருந்தார்கள். அதற்கு அவர்கள் ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள் என துருக்கிய ஆட்சியாளர்கள் கருதிக்கொண்டனர். விளைவு ஒரு மோசமான இனவழிப்பு அந்த தேசத்தில் இடம்பெறலாயிற்று. 20ம் நூற்றாண்டில் மிக மோசமான இனவழிப்பு என இந்தச்சம்பவம் வரலாற்றில் பதிவானது.

தொடரும்...

மறவன்

# பதவிக்கு ஆசைப்படுபவர்களே கூட்டமைப்பின் கொடும்பாவிகளை எரிக்கின்றனர்

கடந்த சில வாரங்களாக தமிழ்க்கட்சிகளுக்குள் கொடும்பாவிகளை எரிப்பது சகஜமாகிவிட்டது. இதற்கமைய அண்மையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரது கொடும்பாவிகளை எரித்த சம்பவமானது தமிழ்பேசும் மக்களது கட்சிகளை பலவீனப்படுத்தும் ஒரு செயலாகவே தோற்றம் பெற்றுள்ளது.

தமிழ்க்கட்சிகள் தமிழ்த்தேசியம். சுயநிர்ணய உரிமை எனக் கூறிக்கொள்ளும் அதேநேரம். தமிழ்மக்களுக்காக குரல்கொடுக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கொடும்பாவிகளை எரித்துக்கொண்டும். தமது குறிப்பாகச் சொல்லப்போனால் தமிழர்விடுதலைக்கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த்தேசிய முன்னணி, வடமாகாணசபை என அனைவருமே குழப்பவாதிகளாக காணப்படுவது, எம் இன ஒற்றுமையை இல்லாதொழிக்கும் ஒரு செயற்பாடாகவே அமைகின்றது. யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுக்கொள்வது போல் எமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்கின்றோம்.

அரசுடன் முட்டிமோத இயலாதவர்களும், முதுகெலும்பில்லாதவர்களுமே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். இத்தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படமுடியாததன் காரணம் என்ன? எனப்பார்க்கின்றபொழுது. பிரதானமாக சிங்கக்கொடியினை ஏற்றியது என்பது தவறானதொரு விடயம். அதுமட்டுமல்லாது சம்பந்தன், சுமந்திரன் இருவரும் இலங்கையின் சுதந்திரதின வைபவத்தில் பங்குபற்றியதும் தவறானதொருவிடயம். நெற்றிக்கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே. அது குற்றம் எனக்கூறி ஏனைய கட்சிகள் ஆதங்கத்துடன் தமது எதிர்ப்பலைகளைத் தெரிவித்தது அதனைவிடக் குற்றம் என தமிழரசுக்கட்சி பார்க்கின்றது. இவ்வைபவத்தில் கலந்துகொண்டமை பிழையானது என வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், பொன்.செல்வராசா, அரியநேந்திரன், விநோதராதலிங்கம். அடைக்கலநாதன், சிவஞானம் சிறிதரன். வடமாகாண சபையின் அன்ரன் ஜெகநாதனைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் அனைவருமே இவர்கள் பங்குபற்றியமை தவறு என்பதை சுட்டிக்காட்டினார்கள்.



அதுமட்டுமல்லாது சிற்றம்பலம் உட்பட மூத்த அரசியல்வாதிகளும் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். ஆனால் இவர்களால், பகிரங்கமாக இவ்வைபவத்தில் கலந்துகொண்ட சம்பந்தன் அல்லது சுமந்திரனுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியவில்லை. அவர்களை எதிர்த்து தமது குரல்களை வழங்கவுமில்லை. வரையிலும் தமிழ்க்கட்சிகளினது சகோதரத்துவம் என்றைக்கும் நிலைபெற்றிருக்கவேண்டும். "புட்டுக் குழலுக்கு தேங்காய்ப்பூவினைப்போல்" இருப்போம் என முஸ்லீம் அரசியல்வாதிகள் கூறுவார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறில்லை. தமிழ்க்கட்சிகள் ஆகிய நாமே தசைக்கு நகத்தினைப்போலவும், உடலுக்கு மூச்சாகவும் வாழ பழகிக்கொள்ளவேண்டும்.

முள்ளிவாய்க்கால் எனப்பேசிவிட்டு பதவிமோகம் கொண்டு ஆசனங்களை நிரப்பியிருப்பதல்ல. வடக்கு மற்றும் கிழக்கில் அமைச்சுப்பதவிகளை வகிப்பவர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை மறந்து செயற்படுவது கவலைக்குரியது. அவ்வாறு செயற்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றது. ஆகவே தன்மானமுள்ள தமிழர்களாய் நாம் வாழவேண்டுமாகவிருந்தால் அரசாங்கத்திற்கு விலைபோகாது எமது உரிமைகளைப் பெற்றுக்கொண்டு அதிலிருந்து விலகிக்கொள்ளவேண்டுமே தவிர, கட்சிகளுக்குள்ளேயே குறையினைக் கூறிக்கொண்டிருப்பது சிறந்ததல்ல. அதனைப்போன்று கட்சியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் மோதிக்கொண்டாலும் சுயநலத்திற்காக கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன், அனந்தி சசிதரன், சிவகரன் போன்றோர் செயற்பட்டுவருவதாகதமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகளை பகிரங்கமாக கண்டித்தும் வருகின்றனர்.

இவர்கள் குறிப்பாக பதவிக்காக ஆசைப்பட்டு தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை. முள்ளிவாய்க்கால்பிரச்சினைகள் எனப் பேரம்பேசி, தமிழினத்தை பாதாளத்திற்குள் கொண்டுசெல்லும் விதமாகவே இவர்களினுடைய செயற்பாடுகள் அண்மைக்காலமாக இடம்பெற்றுவருகின்றது. இதனால் இவ்வாறானவர்களுக்கு இலாபம் என்ன? எனப்பார்க்கின்றபொழுது, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் பிரதிநிதிகள் எனக்கூறிக்கொண்டு ஆசனங்களைக் கைப்பற்றி தமது வயிற்றுப்பிழைப்பிற்காக வாக்குகளை சேகரிப்பதே இவர்களது நோக்கமாகும்.

கஜேந்திரகுமார், பத்மினி போன்றோருக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆசனங்களை வழங்காததன் காரணமாக அதிலிருந்து பிரிந்துசென்றார்கள். இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாமாகவே விலகிச்சென்றார். இவ்வாறு மக்கள் தமது கருத்துக்களை தெரிவித்திருக்கும் அதேநிலையில், மறுபக்கத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எனக் கூறிக்கொண்டு சிங்கக்கொடியினை ஏற்றுவதும், சுதந்திர தினத்தில் பங்குபற்றுதலும், அரசுடன் இணைந்து இணக்கப்பாட்டு அரசியலை மேற்கொள்வதிலும் தீவிரம் காட்டி வருவதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் அதே நேரம், இவ்வாறான செயற்பாடுகளுக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அல்ல. இவர்களை வழிப்படுத்தும் தமிழரசுக்கட்சியே காரணம் என ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களால் கூறப்பட்டுவருகின்றது.

மறுபக்கத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினை பிளவுபடுத்தும் நோக்கில் கடந்த அரசாங்கம் மட்டுமல்ல. இந்த அரசும் அதேநிலைப்பாட்டினையே கடைப்பிடித்து வருகின்றது. இதனை உணர்ந்துகொள்ளாது தமிழ்க்கட்சிகள் போட்டியும் பொறாமையுமாகும். பதவியாசை, சுயநலம், நானா நீயா பெரியவன் இவ்வாறு பல அடிப்படைக்காரணங்கள் இக்கட்சிகளுக்குள்ளேயே தோற்றம் பெற்றுள்ளது.

ஈ.பி.டி.பி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற இரு கட்சிகளைத் தவிர, ஏனைய கட்சிகள் அனைத்தும் தமிழ்த்தேசியம். சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டுக்குள்ளேயே இருந்துவருகின்றன. சிறிது காலமாகவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஒரு மாற்றத்தினை உண்டுபண்ணியுள்ளது. அதுவே இணக்கப்பாட்டு அரசியல் என்பதாகும். இதற்காக சில விட்டுக்கொடுப்புக்களைசெய்யவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. இதனை பெரிதாக கொள்வது என்பது தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு ஏற்றதல்ல.

அவ்வாறு முரண்படுகிறவர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலுள்ளவர்களாலும், தமிழரசுக்கட்சியிலுள்ளவர்களாலும் துரோகிகள் என பட்டம் சூட்டப்படுகின்றனர் அல்லது சூட்டப்படுவார்கள். காரணம் என்னவென்றால், ஏனைய கட்சியினை விடவும் தமிழரசுக்கட்சியின் பலம் ஓங்கிநிற்பதைக் காணமுடிகின்றது. ஆயுதக்கட்சிகளைப்பொறுத்தவரையில், தமிழ் மக்களுக்கு துரோகத்தினை விளைவித்தவர்கள் அல்லது கப்பம். கொள்ளையடித்தவர்கள் என்று அவர்களுக்கு ஒரு பெயர் சூட்டப்பட்டுள்ளது. தேர்தல் பிரச்சாரங்கள் வருகின்றபொழுது ஆசனங்கள் பகிர்ந்தளிப்பதை தமிழரசுக்கட்சியிலுள்ளவர்களே வழங்குவதனால், அதனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மௌனிகளாகவிருக்கவேண்டிய சூழ்நிலை இக்கட்சிகளுக்கு இருக்கின்றது. இவர்கள் யாராவது எதிர்த்துக்குரல்கொடுத்தால் இவர்கள் கட்சிக்கு முரணானவர்கள் என தமிழரசுக்கட்சி அல்லது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இவர்களுக்கான தீர்வுகளை மேற்கொள்ளும்.

இதில் ஒரு விடயம் சம்பந்தன் அல்லது சுமந்திரன். அன்ரன் ஜெகநாதன் யாராகவிருப்பினும் இதுகுறித்து வினவினால் அது அரசியல் இராஜதந்திரம் என்கின்ற வார்த்தையினை பயன்படுத்திக்கொண்டுள்ளனர். இவ்வாறெல்லாம் இக்கட்சிகளுக்குள்ளேயே பலதரப்பட்ட முரண்பாடுகள் இருந்துவருகின்றமை உண்மையான விடயம்தான்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பானது அல்லது தமிழ்மக்களை பெரிதளவில் பிரதிபலிக்கின்ற ஒரு கட்சியானது எவ்வாறு தமது விடயங்களில் செயற்படவேண்டும் என்பதை முதலில் உணர்ந்து செயற்படவேண்டும். அமெரிக்கரசானது இராணுவ மற்றும் அரசியல் ரீதியாக தந்திரோபாயங்களை பயன்படுத்தும். அதுவே அதன் வெற்றியின் இரகசியமாகவும் இருக்கின்றது. அது என்னவெனில் உண்மைகளை மூடிமறைத்து பொய்களையே வெளியிடுவது. ஆனால் தமிழ்க்கட்சிகளைப்பொறுத்தவரையில் உண்மைகளை வெளியில் கூறி. பொய்களை மூடிமறைப்பதனால் எதிரியானவன் எமது பலவீனங்களை அறிந்து இலகுவாக செயற்பட காரணங்களாகவும் அமைந்துவிடுகின்றன.

கட்சிக்குள் இடம்பெறும் விடயங்களை மறைப்பது என்பது தவறல்ல. அது ஒருபோதும் கட்சிக்கு பாதகமான தன்மைகளை ஏற்படுத்தப்போவதில்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால் பலவீனங்களை வெளியிடாது பலத்தினை வெளியிடவேண்டும். இவ்வாறு மேற்கொள்வதன் மூலம் எமது குறித்த வெற்றி இலக்கினை அடைய முடியும் என்பதே பொருள். ஆனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை அங்கத்துவப்படுத்தும் கட்சிகளும், அதில் இருக்கும் அங்கத்தவர்களும் ஒற்றுமையுடன் செயற்படாததன் காரணமாகவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இன்று நாற்றம் எடுக்க ஆரம்பித்துள்ளது.

தற்பொழுது பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறவிருக்கின்ற நிலையில். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை பலவீனப்படுத்தி, அதிலுள்ளவர்களின் கொடும்பாவிகளை எரித்து, கட்சியினை சின்னாபின்னமாக்கும் நடவடிக்கையில் எமது சகோதரக்கட்சிகள் இறங்கிவிடக்கூடாது. எமது குறிக்கோளினை அடையும் அதனை பெரிதுபடுத்தாது தங்களுக்குள்ளேயே அதனைத் தீர்த்துக்கொள்வதற்கான அவசியம் தேவைப்படுகின்றது.

அதற்காகவே கட்சிகள் மாதந்தோறும் சந்திப்புக்கள் மற்றும் மகாநாடுகள், விருந்தோம்பல் என்கின்றதான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் கட்சிகளுக்குள் ஏற்றத்தாழ்வுகள், போட்டி பொறாமைகள் ஏற்பட காரணமாக அமையாது. காரணம் தமிழ்மக்களாகிய நாம் இன்னும் குறித்த இலக்கினை அடையவில்லை. இலக்கினை அடையும் நேரங்களில் எல்லாம் காட்டிக்கொடுப்புக்களும், தமது பதவிகளுக்காக சோரம் போன வரலாறுகளுமே முன்நிற்கின்றது. வாழையடி வாழையாக வரலாற்றுக்களை அமைத்துக்கொள்ளாது எமது செயற்பாடுகள் அமையவேண்டும்.

விடுதலைப்புலிகளின் கருணா-பிரபா பிரிவு என்பது போராட்டத்தினை எவ்வாறு மாற்றியமைத்ததோ, அதேபோன்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலைகளும் கட்சிகள் அழிவடைந்து போகும் செயல்வடிவங்களாகவே இறுதியில் தோற்றம் பெறும். இத்தனை பிரச்சினைகளையும்சீர்செய்துகொள்வது சிறந்ததொன்று. ஆகவே பதவிக்கு ஆசைப்படுபவர்களே கூட்டமைப்பின் கொடும்பாவிகளை எரிக்கின்றனர் என்ற நிலைமையை மாற்றியமைத்து. தமிழ்மக்களுக்கான அஹிம்சைப்போராட்டத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுதிரண்டு தமிழ் மக்களது அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும்.

இல்லாதுவிடின் தமிழினம் வாழ்ந்த வரலாறுகளே இல்லாது போய்விடும். கவனத்திற்கொள்ளவேண்டிய ஒரு விடயம் என்னவென்றால். சர்வதேசப் பேச்சுவார்த்தைகள் தற்பொழுது மௌனிக்கப்பட்டு, உள்ளூர்பேச்சுக்கள் என புதிதாக வந்த மைத்திரி அரசு புராணம் பாட ஆரம்பித்துள்ளது. ஆகவே தமிழ் கட்சிகளுடைய ஒற்றுமை எந்தளவில் தங்கியிருக்கின்றது என்பதில் தான் தமிழ்மக்களின் தலையெழுத்து அமைகின்றது எனலாம்.

மறவன்

# பிராந்தியச் செய்திகள்

## மஸ்கெலிய வேன் விபத்தில் 15 பேர் படுகாயம்




இரத்தினபுரியிலிருந்து சிவனடி பாத மலையை தரிசித்து விட்டு வந்த வேன் ஒன்று மஸ்கெலியா புரவூன்லோ தோட்ட பகுதியில் வீதியை விட்டு விலகி 75 அடி பள்ளத்தில் பாய்ந்துள்ளது. இதனால் அதில் பயணித்த 15 பயனிகளும் படுகாயமடைந்துள்ளனர்.

தகவல்:- மஸ்கெலியா பெருமாள்

## 126 சிங்கள பொலிஸார் வட கிழக்கில் நியமனம்



இலங்கை அரச கரும மொழிகள் திணைக்கள ஏற்பாட்டில் மட்டக்களப்பு பொலிஸ் பயிற்சி கல்லூரியில் 5 மாதங்களைக் கொண்ட தமிழ் மொழி டிப்ளோமா பயிற்சி பாடநெறியை பூர்த்தி செய்த 126 சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் வெளியேறினர். இவர்களுள் 124 பொலிஸ் உத்தியோகத்தர்கள், 4 பெண் பொலிஸ் உத்தியோகத்தார்கள், 10 பொலிஸ் சார்ஜன்ட்கள் அடங்குவதாக மட்டக்களப்பு பொலிஸ் பயிற்சி கல்லூரி பொறுப்பதிகாரி A.அருளானந்தம் தெரிவித்தார்.

பொலிஸ் பயிற்சி கல்லூரி உதவி பணிப்பாளர் பி.ஜினதாச தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஜெயசிங்க பிரதம அதிதியாகக கலந்து கொண்டார். தமிழ்மொழி கற்கையை பூர்த்தி செய்த சிங்கள பொலிஸாரின் தமிழ் மொழியிலான கலை கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. உயர் பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். பயிற்சியை நிறைவு செய்த பொலிஸார் வடக்கு கிழக்கு மற்றும் மலையகப்பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊர்காவற்துறையில் நபர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை



ஊர்காவற்துறை பிரதேச வீடொன்றில் நபரொருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர் 42 வயதுடைய ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

தற்கொலைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் ஊர்காவற்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றது.


## கிணற்றுக்குள் விழுந்து சிறுவன் பரிதாப பலி



முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் கிணற்றுக்குள் விழுந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. விசுவமடு வள்ளுவர்புரம் பகுதியைச் சேர்ந்த ஐந்து வயதுடைய விமலன் அபிஷேக் என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சிறுவன் விளையாடிக் கொண்டிருக்கையில், எவ்விதபாதுகாப்பும் இல்லாத கிணற்றில் தவறுதலாக விழுந்துள்ளான் என பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இச் சிறுவன் பெற்றோர்களுக்கு ஒரே ஒரு பிள்ளை என தெரிவிக்கப்படுகின்றது.

## இரு வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்தில் இருவர் பலி




பொலன்னறுவை - மட்டக்களப்பு வீதி, வாகனேரி பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். வேகமாக சென்ற மோட்டார் சைக்கிளின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் மோட்டார் சைக்கிள் பாதையை விட்டு விலகியதனால் இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன், மனைவி இருவரும் காயமடைந்துள்ளனர். எனினும் இவ்விருவரையும் உடனடியாக வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதித்ததோடு, மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றியுள்ளார்கள். மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மனைவி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் வயது 31 என பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேலும் பிரேத பிரசோதனைக்காக சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை முறுகண்டி செல்வபுரம் பகுதியில் அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த ஐவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து தம்புள்ளைக்கு மரக்கறி ஏற்றிச் சென்ற லொறி வேகக்கட்டுப்பாட்டை இழந்ததனாலேயே விபத்துக்குள்ளாகியுள்ளது. கடந்த நாட்களில் முறுகண்டிப் பகுதியில் பாரிய விபத்துக்கள் தொடர்ந்து நடந்த வண்ணம் உள்ளதாக பிரதேச வாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மெற்கொண்டு வருகின்றனர்.

## வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி



திருகோணமலை மாவட்டத்தில் வட்டவான் கிராமத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான ஒரு தொகுதி நிவாரணப்பொருட்கள் கனடா மறுவாழ்வு நிறுவனத்தினால் நான்காம் திகதி காலை 10.00மணியளவில் வழங்கிவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.இரா.சம்பந்தன், கிழக்குமாகாண சபையின் கல்வி அமைச்சர் திரு.சி.தண்டாயுதபாணி, வெருகல், மூதூர் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் திருகோணமலை நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டு 165 குடும்பங்களுக்கு நிவாரண பொதிகளை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வின் போது கிழக்கு மாகாண சபையில் புதிதாக கல்வி அமைச்சராக பதவியேற்ற திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 8 மாதங்களாக சிறுநீரக மாற்று சிகிச்சைகளுக்கு தடை



தேசிய சிறுநீரக சத்திரசிகிச்சை நிலையத்தில் கடந்த 8 மாதங்களாக சிறுநீரக மாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. இதனால் சிறுசீரக மாற்று சிகிச்சைகளுக்காக பட்டியலிடப்பட்டுள்ள நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த பட்டியலில் அதிக அவதானமுடைய நோயாளர்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. சிறுநீரக மாற்று சிகிச்சை நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டு வருவது தொடர்பில் அதிகாரிகள் அசமந்த போக்குடன் செயற்படுகின்றனர் என நோயாளிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை தீவிர கன்காணிப்பு பிரிவில் முன்னெடுக்கப்பட வேண்டிய திருத்தற்பணிகள் காரணமாகவே சிகிச்சைகள் தடைப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அந்நிலையத்தின் பணிப்பாளர் டொக்டர் சுமித் ஆனந்த தெரிவித்துள்ளார்.

---

இன்று காலை 10.30 மணியளவில் (06.03.2015) வெள்ளிக்கிழமை வட மாகாண மீன்பிடி அமைச்சர் கௌரவ.பா.டெனீஸ்வரனின் தலைமையில், செட்டிக்குளம் என்னும் இடத்தில் வெதுப்பகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் கௌரவ.ப.சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்கள், செட்டிக்குளம் உதவி அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், கிராமசேவையாளர் தியாகராஜா உட்பட பொதுமக்கள் என பலரும் கலந்துசிறப்பித்தனர்.

---

**நம்பவைத்து கழுத்தறுத்து பிணம் தின்னும் ஒருவர் தான் அமைச்சர் ரவூப் ஹக்கீம்**

**கடந்தவாரத்தொடர்ச்சி...**

தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் ஓர் இணக்கப்பாட்டைக் காண்பதற்கு அவர்களுடன் மூன்று, நான்கு தடவைகள் கதைத்தோம் அவர்களது பிடிவாதப் போக்கில் எந்த விதமான தளர்வும் இல்லாத நிலையில், இறுதியில் நாங்கள் முதலமைச்சர் நியமனம் பற்றி முடிவெடுத்த போது அவர்களது மாகாண சபை உறுப்பினர்கள் கூட எங்களோடு உடன்பாடு காணவந்தார்கள். அதையும் இப்பொழுது தலைமையின் அங்கீகாரமின்றி நடந்ததாக அவர்கள் கூறலாம்.

ஆனால் எங்களைப் பொறுத்தவரை தலைமையின் அங்கீகாரத்துடன் தான் எல்லாம் நடக்கின்றன என்ற நம்பிக்கையில் அவர்களோடு நாங்கள் சில உடன்பாடுகளுக்கு வந்தோம். உடன்பாடுகளை நாம் நிச்சயமாக கௌரவிப்போம். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்க வேண்டிய அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து, கிழக்கில் எமது தலைமையில் ஒரு தேசிய அரசாங்கம் அமைந்தது என்ற பெருமையை நிலைநாட்டுவோம். இன்னும் பக்குவம் தவறி எடுத்தெறிந்து பேசுகின்ற நிலைமை தொடர்வது மிகவும் வேதனைக்குரியது.

ஏனென்றால் அண்ணன் சம்பந்தன் மூத்த அரசியல்வாதி. அவரோடு என்னை ஒப்பிடுவது மலைக்கும், மடுவுக்குமுள்ள வித்தியாசம். அவரிடமிருந்து படிக்க வேண்டியவை நிறைய உள்ளன. அவரை நான் நொந்து கொள்ள விரும்பவில்லை. நான் அவரை விமர்சிப்பதன் மூலம் என்னை நான் உயர்த்திக் கொள்ள முடியும் என்றும் நான் நினைக்கவில்லை. அந்த மூத்த அரசியல் தலைமைக்கு முழுமையாக மதிப்பளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். இந்த நிலையில் அண்ணன் சம்பந்தனை எங்களது குருவாகத்தான் நான் பார்க்கின்றேன். இந்த இடத்தில் மஹாபாரதத்தில் வருகின்ற ஓர் உதாரணத்தைக் கூறிக் காட்ட விரும்புகின்றேன். இந்த முதலமைச்சர் பதவியை அண்ணன் சம்பந்தன் தங்களுக்கு தர வேண்டுமெனக் கேட்பதை மஹாபாரதத்தில் வருகின்ற ஒரு சம்பவத்தோடு ஒப்பிட்டுக் காட்ட நான் விரும்புகின்றேன். அது அவ்வளவு தூரம் எங்களது கட்சியையும், அரசியலையும் பாதிக்கும் என்கின்ற நிலையிலேயே இதனைக்கூறுகின்றேன்.

அது என்ன சம்பவம் என்றால், மஹாபாரதத்தில் ஏகலைவனின் குரு துரோணரைப்பற்றி அதனைப் படித்தவர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். தனது பயிற்சியை வில் வித்தையில் தனது சிஷ்யனான ஏகலைவனுக்கு வழங்கிய துரோணாச்சாரியார் ஏகலைவனிடம் கேட்டது வேறெதையுமல்ல,'உனது கட்டை விரலை வெட்டித் தா?' என்று கேட்கிறார். கட்டை விரலை வெட்டினால் வில் வித்தையில் ஏகலைவனால் நீடிக்க முடியாது. அவ்வாறு துரோணாச்சாரியார் கட்டை விரலை ஏகலைவனிடம் கேட்டதற்குச் சமமாகத்தான் முதலமைச்சர் பதவியை அண்ணன் சம்பந்தன் கேட்கின்றார் என்ற அளவிற்கு எங்களது உணர்வுகள் இருந்தன.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியலில் இந்தக் கட்டத்தில் முதலமைச்சர் பதவியை நாங்கள் கிழக்கில் பறிகொடுத்திருந்தால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருப்போம். அது எங்களுக்கு வாக்களித்தமக்களும், எங்களுக்குஎதிராக இயங்குகின்றவர்களும் எங்களைத் தூற்றுவதற்கு வாய்ப்பாகப் போய்விடும்.




## யாமிருக்க பயமே இயக்குனரின் அடுத்த படைப்பு



Rs infotainment தயாரிப்பில் யாமிருக்க பயமே என்ற திகில் படத்தை கூட சிரிப்பு வெடியாய் சென்ற வருடம் கொடுத்தவர் இயக்குனர் டிகே. தற்போது தனது அடுத்த படத்தை பற்றி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

மீண்டும் Rs infotainment நிறுவனத்துடன் கைகோர்க்கும் டிகே இதில் ஜீவாவை நடிக்க தேர்வு செய்து உள்ளார். மேலும் முக்கிய வேடத்தில் நடிகர் பாபி சிம்ஹா நடிக்க ரொமாண்டிக் கதையம்சம் கொண்ட திரைப்படமாக உருவாக உள்ளது.


## வீடியோவால் உஷாரான ஹன்சிகா



வாலு, ரோமியோ ஜூலியட், புலி என பல படங்களில் நடித்து வருகி றார் ஹன்சிகா. சமீபத்தில் இவர் குளிப்பது போல் ஒரு வீடியோ வைரலாக பரவி வந்தது. ஆனால், அந்த வீடியோ மார்பிங் செய்யப்பட்டது என தெரிய வர, ஹன்சிகா மிகவும் கோபமாக தன் கருத்துக்களை கூறினார்.

இது போன்று செய்வது கற்பழிப்புக்கு சமம் என்று தெரிவித்திருந்தார். இந்நிலையில் இனி எந்த ஹோட்டலுக்கு சென்றாலும், பலத்த பாதுகாப்புடன் இருக்க தன் பாதுகாவலர்களை அதிகப்படுத்தி விட்டாராம்.

## இளையராஜா எடுத்த அதிரடி முடிவு



இந்திய சினிமாவின் ஈடு இணை யற்ற இசையமைப்பாளர்களில் இளைய ராஜாவும் ஒருவர். இவர் இதுவரை 1001 படங்களுக்கு இசையமைத்துள்ளார். பாலா இயக்கத்தில் உருவாகி வரும் தாரை தப்பட்டை படம் தான் இவரின் 1000வது படம். சில நாட்களாகவே இவரது பாடல்களை அனுமதியின்றி பல படங்களின் பயன்படுத்தி வருகின்றனர்.

இதை கண்ட இவர் நீதிமன்றத்தில் வழக்கு கொடுத்தார். தீர்ப்பு இளையராஜாவுக்கு சாதகமாக வந்தது. இதனை தொடர்ந்து தன் படங்களின் பாடல்கள் அனைத்தையும் அந்தந்த படத்தின் தயாரிப்பாளர்களுக்கே உரிமம் கொடுத்துள்ளார். இனி யார் இவருடைய பாடலை பயன்படுத்த வேண்டுமெனில் அந்த படத்தின் தயாரிப்பாளரை தான் அணுக வேண்டும்.

## அனுஷ்காவின் விபரீத முடிவு?



தென்னிந்திய சினிமாவில் ஹீரோக்களுக்கு நிகரான கதாபாத்திரங்களில் நடிப்பவர் அனுஷ்கா. இவரது நடிப்பில் பாஹுபலி, ருத்ரமாதேவி ஆகிய படங்கள் ரிலிஸுக்கு வெயிட்டிங். இந்நிலையில் இவர் அடுத்து நடிக்க போகும் படம் ஜீரோ சைஸ். இப்படத்தை பிரகாஷ் கொவெலமுடி இயக்க, கீரவாணி இசையமைக்கிறார்.

இப்படத்திற்காக 20 கிலோ உடல் எடையை கூட்ட முயற்சி செய்து வருகி றாராம். நடிகைகள் என்றாலே உடல் எடையை குறைக்க தான், விரும்புவார்கள் ஆனால், படத்தின் கதாபாத்திரத்திற்காக தான் இந்த முயற்சியாம்.

## திடீரென்று ரூட்டை மாற்றும் காஜல் அகர்வால்



தெலுங்கில் காஜல் அகல்வால் நடித்த இரண்டு படங்களும் வெற்றிபெறாத நிலையில், அப்படியே தற்போது காஜல் அகர்வால் தமிழுக்கு திரும்பியுள்ளார். படத்துக்குப்படம் ரொமான்ஸ் செய்தோம், டூயட் பாடினோம் என்பதை விட வித்தியாசமான வேடங்களில் நடிக்க காஜல் ஆர்வம் காட்டிவருகிறாராம்.

இதற்கு காரணம் சமீபத்தில் ராம் சரணுடன் நடித்த படத்தில் கவர்ச்சி காட்சிகள் இடம் பெற்றது. அதனால் இதே ரூட்டை தொடர்ந்தால் கவர்ச்சி நடிகையாகி விடுவோம் என்று உஷாராகி, பர்பொமென்ஸ் நடிகை பட்டியலில் இடம்பிடிக்க கடும் முயற்சியில் இறங்கியுள்ளாராம். அதனால் எனக்கு அழுத்தமான காட்சிகளை கொடுங்கள் என்று பல டைரக்டர்களை கேட்டு வருகி றாராம் காஜல்.

## யுவன் பெயரால் நடந்த பெரிய மோசடி?



தென்னிந்திய சினிமாவில் தன் இசையால் ரசிகர்களை கவர்ந்து இழுத்தவர் யுவன் ஷங்கர் ராஜா. இவர் திருநெல்வேலியில் ஒரு பிரமாண்ட இசை கச்சேரி நடத்துவதாக இருந்தார். ஆனால், என்ன காரணமோ 2 முறை இந்த கச்சேரி தள்ளிப்போய் விட்டது. இந்நிலையில் கடந்த வாரம் யுவன் கச்சேரி சொன்ன திகதியில் நடைப்பெறும் என கூறி விழா குழுவினர்கள் வசூல் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

யுவன் இசை நிகழ்ச்சி என்றவுடன் எல்லோரும் முண்டியடித்து கொண்டு செல்ல, யுவன் அங்கு வரவே இல்லையாம். இதனால், கோபமான ரசிகர்கள் நாற்காலிகளை உடைத்து பிரச்சினை செய்துள்ளனர். இதில் சோகம் என்னவென்றால், இந்த செய்தி யுவனுக்கு தெரிந்திருக்குமா? என்றால் சந்தேகம் தான்.


## திரையுலகிற்கு அதிர்ச்சி கொடுத்த பிரபலத்தின் மரணம்



ஆடுகளம் படத்திற்காக சிறந்த எடிட்டர் என தேசிய விருது வாங்கியவர் கிஷோர். இவர் பல ஹிட் படங்களில் எடிட்டராக பணியாற்றி இருக்கிறார். சமீபத்தில் இவர் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகவும், மூளையில் இரத்தம் உறைந்ததால் கோமா நிலை யில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று அறிவித்திருந்தோம்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவரின் மூளை செயலிழந்தது. இதனையடுத்து அவரின் உடலுறுப்புகளை தானம் செய்யவுள்ளனர். . இவரின் இழப்பு திரையுலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவரது உடல் அவரின் ஸ்டுடியோவில் வைக்கப்படவுள்ளது. மக்கள் மற்றும் திரைப்பிரபலங்கள் அஞ்சலி செலுத்துகின்றனர். இவருக்கு இரண்டு மாதத்தில் திருமணம் நடப்பதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் திரைப்பட விருது விழாவில் உலக திரைப்படங்கள்




தமிழ் திரைப்பட விருது விழா கடந்த 6 வருடங்களாக வெற்றிகரமாக நோர்வேயில் நடைபெற்று வருகிறது. அதே போல் இந்த வருடம் 6வது திரைப்பட விழா வரும் ஏப்ரல் மாதம் 23ம் திகதி பிரமாண்டமாக தொடங்கவிருக்கிறது. கடந்த 5 வருடங்களாக தமிழ் மொழி யில் வெளிவந்த முழு நீளப்படம், குறும்படங்கள், ஆவணப்படங்கள், இசைப்பாடல், காணொளி, அனிமேஷன் ஆகியவற்றோடு 30 வகையான பிரிவுகளில் தொடர்ந்து தமிழர் விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு ஓர் புதிய பிரிவாக உலக நாடுகளின் சினிமாவுக்கான குறும்படம், ஆவணப்படம், முழு நீளப்படம் ஆகியவற்றிற்கும் போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இந்த ஆண்டு சிறப்பு திரையிடலாக, சீனாவின் VIN CENT என்னும் குறும்படமும், TAKAO DANCER என்னும் முழு நீளப்படமும், சரஜெவோவின் FINDING FAMILY என்னும் ஆவணப்படமும், ரஷ்யாவின் MY GURU என்னும் ஆவணப்படமும், டென்மார்க்கின் INLUSIO என்னும் குறும்படமும் திரையிடவிருக்கிறது.

## சமீபத்தில் உலகை உலுக்கிய நிகழ்வை படமாக்கும் கமல்



கமல்ஹாசன்படைப்புகள்எப்பொழுதுமே தனித்துவம் வாய்ந்தே இருக்கும். கடந்த வாரம் மிக பிரம்மாண்டமாக நடைபெற்ற உத்தம வில்லன் படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வருடம் கமல் ரசிகர்களுக்கு செம்ம விருந்து தான், உத்தம வில்லன், விஸ்வரூபம் -2 , பாபநாசம் ஆகிய மூன்று படங்கள் ரிலீஸ்க்கு ரெடி ஆகியுள்ளன. இந்நிலையில் கமல் தனது அடுத்த படத்தை நோக்கி திட்டமிட்டுள்ளார். சமீபத்தில் கூட மொரீசியஸ் தீவுகளுக்கு சென்று அடுத்து படத்துக்கான படப்பிடிப்பு தளத்தை தேர்வு செய்து உள்ளாராம்.

அவர் அடுத்து எடுக்கும் கதை ஒரு உலகத்தரம் வாய்ந்த உண்மை கதை என்கிறார்கள். அதாவது ராஜ்குமாரின் பிரபல நாவலான 'வெல்வெட் குற்றங்கள்' நாவலையும், மலேசிய விமா னம் தொலைந்துபோன மர்மத்தையும் இணைத்து ஒரு கதையாக எடுக்க உள்ளதாகவும் அதில் கமல் நடிக்க உள்ளதாகவும் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கொம்பன் படத்தால் கருணாஸுக்கு கிடைத்த பெருமை



இயக்குனர் பாலாவின் அறிமுகத்தால் நந்தா படத்தில் லொடுக்கு பாண்டி என்ற கதாபாத்திரத்தில் அறிமுகமானார் நடிகர் கருணாஸ். அதன் பிறகு ஒரு பிரபலான கொமடியனாக வலம் வந்த அவர் கூடவே சில நல்ல படங்களை விநியோகமும் செய்தார். அவர் செய்த விநியோகத்தில் குறிப்பிடத்தக்க படம் ராம் இயக்கத்தில் வந்த "தமிழ் எம். ஏ. இதனிடையில் ஹீரோ ஆகும் ஆசை அவருக்கு தலை தூக்க திண்டுக்கல் சாரதி, அம்பாசமுத்திரம் அம்பானி, சந்தமாமா போன்ற படங்களில் நடித்தார்.

இந்த ஹீரோவாக நடித்த சில படங்கள் சரியாக போகாததால் அவர் மார்க்கெட்டை காலி செய்ய வேறு வழி இல்லாமல் திரும்பவும் கொமடி வேடத்தை தேடி அலைந்தார். அந்த நேரத்தில் அவருக்கு அமைந்தது தான் டார்லிங். குறைந்த சம்பளமாக இருந்தாலும் நடித்தார். டார்லிங் ஹிட்டானதையடுத்து ஸ்டுடியோ கிரீன் தயாரிப்பிலே கொம்பன் படத்தில் நடித்துள்ளார். கொம்பன் படத்தின் பாடல் வெளியிட்டு விழா மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட கருணாஸ் கொம்பன் எனக்கு 100வது படம் என மகிழ்ச்சியோடு கூறி னார்.


## முத்த காட்சிக்கு தமன்னா போட்ட கண்டிஷன்



வீரம் படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு ரீஎண்ட்ரி கொடுத்து தற்போது ஆர்யாவுடன் ஒரு படத்தில் நடித்து வருகிறார் தமன்னா. இவர் திரையுலகில் காலடி எடுத்து வைக்கும் போதே சில கட்டுப்பாடுகளுடன் தான் வந்துள்ளார். அது என்னவென்றால் எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும், லிப் லாக் முத்த காட்சி, பிகினி உடை அணிவது, இந்த இரண்டு மட்டும் எப்போதும் செய்யக்கூடாது என முடிவெடுத்து தான் வந்தாராம். இதில் ஒரு ஹிந்தி படத்தில் பிகினி உடையில் நடித்து தன் சபதத்தை மீறினார். ஆனால், ஒரு போதும் முத்த காட்சிக்கு மட்டும் இடமே கிடையாது என்று கூறிவிட்டாராம்.



# கவிதைப் பூங்கா



## எங்கள் பயணம்

இங்கு
பாதைகள் வளையாது
எங்கள்
பயணமும் முடியாது
இலக்கினை
அடையும் வரை
எமக்கு
இரவேதும் கிடையாது

த.ஜீவமோகினி
தாழையடி

## மாதவி

காதல் அன்பை
நம்பி விதைத்தோம்
விதி சதியானதால்
அறுவடை செய்யமுடியவில்லை

தூரத்தில் நீ இருந்தாலும்
துண்டிக்காத நினைவுகள்
அலையாக மோதுகிறதடி

கரையாக இருப்பதால்
தாவிப்போக முடியவில்லை
திரும்பவும் தத்தளிக்கிறது

இதயத்தின் ஓட்டம்
நின்றுவிட்டால்...
கண்கள் தூங்கிவிடும்
இன்பத்தில் நிம்மதி
தானாக வருமடி

என் - இதயத்தில்
உன் - பொன்னான உருவம்
ஆனியால் அடித்து
சிலுவையானதடி - அதனால்
வேறு ஒரு - மாதவியை
பார்க்க முடியவில்லை
நீ...
கண்களில் காட்சி தருவதால்

வீ.அருள்ராஜா
வவுனிக்குளம்

## விடுதலை

**மனம் விட்டு**
**அழுதாலும்**
**மலரீட்டு**
**இன்னமும்**
**இருள் போர்த்தியே**
**கிடக்கிறது**
**எங்கள் கி(வ)ழக்கு**

## துவேசம்

இந்த உறவில்
உன்னோடு
சிரிப்போடு மட்டுமே
சினேகம்
வைக்க முடிகிறது
இருந்தும்
உள்ளே அழைக்க
மனம்
எத்தனிக்கும்
போதெல்லாம்
இனம் சொல்லி
மனம் கிள்ளி
எறிகிறாய்...
உனது
துவேசக்கரை
அடைமழை அடித்தாலும்
அகழாது
அது
அகத்துள்
சூழ்கொண்ட
இருட்டு
ஆதவனை அழைத்தாலும்
விலகாது

கு.தவசீலன்
பளை

**கனவிலே வந்து என் இதயம் கவர்ந்தவனே**
**மீண்டும் நீ வரும் வரை காத்திருப்பேன் – உனக்காக**
**காதலுக்கு கண் இல்லை என்று கவிஞர்**
**பலர் சொன்னதுண்டு – என் காதலும்**
**முதலில் இதயத்திலேதான் தோன்றியது**
**உன்னை கண்ட தருணம் என் கணகள்**
**இமைக்க மறந்தன – கண்கள் மட்டுமல்ல**
**என் இதயம் கூட ஒரு நொடி**
**துடிக்க மறந்தது**
**உன் தாய் உன்னை சுமந்தது ஜனனம் வரை**
**நான் உன்னை சுமப்பேன்**
**என் மரணம் வரை – நான்**
**உன்னை சேரும் காலம் எது ஆகும்**

## பாவமோ சாபமோ ?

சேலைத் தொட்டிலில்
ஏழைக் குழந்தைகள்
கொல்லப்படுவதும்

பெண் என்றானதால்
குப்பைத் தொட்டியும்
தொட்டிலாய்ப் போனது

அப்பன் பெயரது
தெரியாது போனதால்
பாவங்கள் ஒன்றாகிப்
பிறப்பாய் நிற்பதும்
பாசங்கள் ஒன்றாகிப்
பிறப்பாய் வந்ததால்
வாழ்வின் சாபமோ..?
பிறப்பின் பாவமோ..?
அநாதையாய் ஆவதும்
ஆண்டவன் ஆணையோ...?

## சில பத்திரிகைகளுக்கு...

நான்
சோகத்தில்
தாடிவளர்த்து
அழுதழுது
உங்களிடம்
எழுதியனுப்பிய
கவிதைகள்
எல்லாம் எங்கே

என் வார்த்தைகள்
எல்லோருக்கும்
விளங்காது என்று
தானே
நான்
பேனா எடுத்தேன்
கையில் கவிதைகளால்
மனிதர்களோடு
பேச

விடிகாலை
ஆவலோடு
பத்திரிகை புரட்டிப்
பார்க்கிற நேரம்
அதில்
காணாமல்
போயிருக்கும் என்னுடைய
கவிதைகள்
மட்டும்

நான்
ஒரு வாசல் படி
நீங்கள் ஒரு
ஏணிப்படி

உங்கள்
ஏணியில் நானும்
ஆசையில் கால்
வைத்து ஏற
ஏன்
என்னை
தள்ளி விழுத்தினீர்கள்
கீழே


நீங்கள்
எந்தப் பக்கமாய்
தூக்கி எறிந்தீர்கள்
என்
கவிதைகளை
அந்த
பக்கமாய் பாருங்கள்
அழுதுகொண்டிருக்கும்
என் கவிதைகளை
கூட...

உயிரோவியன்

**வியர்வைத் துளிகளும் கண்ணீர்த் துளிகளும் உப்பாக இருக்கலாம். ஆனால், அவைதான் வாழ்வை இனிமையாக மாற்றும்.**




# புனைகதைப் புயல்



# முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி

தொடர் - 81



"அவளச்சொல்லி இவளச்சொல்லி எண்டு இரவிரவாய் அங்கனேக்க திரிஞ்சு கிடந்து போட்டு எனக்கு நடிச்சுக்காட்டுறாய்...."

என்று மாமியார் கூறிய வார்த்தைகள் அவளை அப்படியே தலையில் அடித்து கொள்வது போல இருந்தது.

"மாமி...."

என்று பலமாக கத்தினாள். ராமுக்கோ தாய்மீது வந்த கோபத்திற்கு அளவேயில்லை. ஆனாலும் இரவில் கதைத்தால் அது நீண்ட தூரம் கேட்கும். இதுவரைகாலமும் நிம்மதியாக சந்தோசமாக இருக்கும் குடும்பத்தின் மானம் போய்விடும், அத்தோடு வதனாவும் தானும் கடைப்பிடித்து வந்த கட்டுப்பாடான கௌரவமான வாழ்க்கைக்கு கெட்டபெயர் வந்து விடும் என பயந்தான். அதனால் தாயுடன் திருப்பிக்கதைத்தால் கதை வளருமே யொழிய நிறுத்தமுடியாது என்பது அவனுக்கு தெரியும். இதற்கிடையில் அங்கு நடந்த விடயங்களைப்புரிந்து கொண்ட கணபதிப்பிள்ளையார் எப்படியாவது உடனடியாக தீர்வுகண்டாகவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தார். அயல் வீட்டுக்காரர்களின் பொழுதுபோக்கிற்கு தன் வீட்டுக்கதை விருந்தாகிவிடக்கூடாது என்ற விடயம் அவருக்கு முதன்மையாகப்பட்டது.

சுய கௌரவம் பார்ப்பதில் அவர் அக்கறையுள்ளவராக எப்பவுமே இருப்பார். திருகோணக்காரன் ஒரு கோணம் ஆழ்வான் என்று இவரது தாய் முன்பு அடிக்கடி கூறுவார். தானும் தன் பாடு என்று இருப்பவர் சமூக சேவையில் முன்நிற்பவர், சில அமைப்புக்களில் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற காத்திரமான பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு சிறப்பாக செயற்பட்டவர். மக்கள் முன் உரையாற்றுவதில் நல்ல வல்லமையுள்ளவர். இதனால் தான் அவர்பலமுறை மறுத்த போதும் தற்போது உள்ள கிராம முன்னேற்றச்சங்கத்தில் உப தலைவராக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். அதே வேளை அவருக்கு கோபம் வருவது குறைவு.

ஆனால் 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பது போல கோபம்வந்தால் தாங்கமுடியாது. இது முக்கியமாக செல்லம்மாவுக்கும் தெரியும் ராமுக்கும் தெரியும், வதனாவுக்கு தெரிய சந்தர்ப்பமில்லை. இப்போதெல்லாம் ஏதாவது முரண்பாடென்றால் தானாக விலத்தி நடந்துகொள்ளும் பழக்கத்தை கொண்டிருந்தார். அப்படிப்பட்டவருக்கு இப்படி இரவில் மனைவி சத்தமிட்டது சங்கடமாக இருந்தது. கிட்டவந்தவருக்கு மனைவியிடம் கதை கொடுத்தால் இன்னும் கதை வளர்ந்து பிரச்சினை நீளுமேயொழிய தீர்வு கிடைக்காது என்பதால், மருமகளையே சமாளிக்க முற்பட்டார்.

"பிள்ளை நீ போபிள்ளை .... நான் சொல்லுறன்... போபிள்ளை."

வேகமாக மனைவியிடம் வந்தவர் அவளது பிடியிலிருந்த வதனாவை விடுவித்து கடைக்குள் போகும்படி கேட்டுக்கொண்டார். மாமனாரின் சொல்லை எப்போதும் ஏற்றுக்கொள்ளும் வதனாவுக்கு அப்போது அவர் கூறியதைக்கேட்டு உள்ளே போக விருப்பமில்லாதபோதும் தான் அவ்விடத்தில் நின்றால் வாய்க்குவாய் காட்டி ஏதாவது விபரீதமாகி விடும் என்பதால், விடுபட்ட உடனேயே கடைக்குள் நுழைந்து கொண்டாள். நித்திரையிலிருந்த தர்சாவுக்கு அடி முதல் எதுவுமே தெரியாது. வெளியில் ஏதோ சத்தம் கேட்கிறது என்று கண்விழித்தவளுக்கு 'பட பட' என்று உள்நுழைந்த அண்ணியார் தொப்பென படுக்கையில் விழுந்து போர்வையால் போத்துக்கொண்டு தேம்பித்தேம்பி அழுவதை கண்டதும் அதிர்ச்சி அடைந்தாள்.

கணபதிப்பிள்ளையாருக்கு பெலத்து சத்தமாக கதைப்பது கூடப்பிடிக்காது. இருபது வருடங்களாக அவருடன் வாழ்க்கை நடத்தி வரும் செல்லம்மாவுக்கு இது நன்றாகவே தெரியும். முன்பெல்லாம் அவள் சத்தமாக கதைப்பது கூட கிடையாது. ஆனாலும் ரவியின் சம்பவத்துக்குப்பிறகு செல்லம்மாவில் ஏற்பட்ட மாற்றங்களில் இவ்வாறு சத்தமிடுவதும் ஒன்று. இது அவளுக்கு இடப்பெயர்வுகாலத்தில் ஏற்பட்ட மனக்குழப்பத்தின் எச்சமாக இந்த பழக்கமும் தொடர்கிறது. இதைவிட அடிக்கடி தனிமையிலிருந்து யோசிப்பது அழுவது. வேலைகளை மாறிமாறி செய்வது போன்ற நடத்தைமாறுபாடுகளை கொண்டிருக்கிறார்.

இதற்கு மருந்து மாத்திரைகளால் பயனில்லை. மகிழ்வான வாழ்க்கைச்சூழலை ஏற்படுத்துவதனூடாக மட்டுமே அவளின் நடத்தையில் மாற்றம் ஏற்படும் என்று வைத்தியர்கள் கூறியுள்ளார்கள். இதனால் செல்லம்மாவை கோவிப்பதோ அல்லது அவள் நடத்தைகளால் கோபமடைந்து கொள்வதோ பிழையானது என்பதால், அவள் இவ்வாறு குழம்புகின்ற சந்தர்ப்பங்களில் அவளை அவள் பாட்டில் சிறிது நேரம் விட்டு அவளாக அமைதியடைய விடுவதே சரியான முறையாக வைத்தியர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது பற்றி வதனாவுக்கு நன்கு தெரியுமென்பதால் அவளும் மாமியாரை எதிர்த்து எதுவும் பேசாது போய்விட்டாள். சிறிது நேரம் மாமியார் சத்தமிடுவார் பின்னர் அமைதியடைந்து விடுவார் என அனைவரும் எதிர்பார்த்தனர்.

நிலைமையைப்புரிந்து கொண்ட தர்சா அண்ணியார் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். அழுது கொண்டிருந்தவள் சற்று அமைதியாயிருந்ததால் தானும் அமைதியாக இருந்தாள். வெளியில் தாயின் வியாக்கியானம் நீண்டு செல்வது கேட்டுக்கொண்டிருந்தது.

"என்னம்மா நீங்க ஏன் இப்ப சத்தம் போடுறீங்க...."

"உங்கட விருப்பமில்லாம நான் எதுவும் செய்யமாட்டன்."

"ஏனம்மா இப்ப சத்தம் போடுறீங்க....

இரவில எல்லா இடமும் கேக்கும்..." "அம்மா எனக்காக கொஞ்சம் பொறுங்கோ...."

"பிளீஸ்.... ஏனம்மா....."

இந்த பேச்சினி[illegible]டயே ராம் [illegible]வைக் கெஞ்சிக்கொண்[illegible] அது வதனாவின் கா[illegible] தெ[illegible] கேட்[illegible] தன்னால்தானே [illegible] ஏற்பட்டது என மனம் [illegible]ள். நிம்மதியாக படுத்[illegible]க்கு தான் தண்ணீர் ஊற்றி ப[illegible]னைக்கு காரணமாகிவிட்டேன் என்று நினைத்தாள். மனம் கனமாக இருந்தது. மனதைக் கல்லாக்கிக்கொண்டு படுத்திருந்தாள்.

அமைதியாக பக்கத்திலிருந்த தர்சாவுக்கும் மனதுக்கு கஸ்ரமாக இருந்தது. மகிழ்வாக சிரித்துச்சிரித்து சாப்பிட்டுவிட்டு வந்து தான் படித்துக்கொண்டிருந்தபோது அண்ணி வந்து படுக்கும் போது மகிழ்வாகவே படுத்தாள். அதுவும் நாளை காலையில் 'வகுப்பு இல்லை என்பதால் பாத்திரங்களை காலையில் கழுவலாம் என கூறிவிட்டுத்தானே படுத்தாள். பிறகு சிறிது நேரத்தில் தான் படுத்துவிட்டதால் அதன் பின்பு நடந்தது எதுவும் தெரியாது. ஆனால் அம்மா பேசியதிலிருந்தும் ராம் கூறிய சமாதான வார்த்தைகளிலிருந்தும் இவள் பாத்திரம் துலக்க போனதையும் அதன் போது அண்ணனுடன் ஏதோ கதைக்க முற்பட்டதால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பதை புரிந்து கொண்டாள்.

'வந்து படுத்தவ ஏன் பிறகு போனவா... இவக்கு வேறை வேலையில்லை மாமியார் விடிய கஸ்ரப்படுவா எண்டு போயிருப்ப...' மாமியார் பாசத்தில போய் பேச்சு வேண்டினது தான் மிச்சம்... யோசித்துப்பார்த்தபோது கவலையாக இருந்தது. துன்பத்தின் மேல் துன்பமாக அவளுக்கு திருப்பத்திருப்ப கவலையான வாழ்க்கையே ஏற்படுவதை நினைக்க தலையே வெடித்து விடுமாப்போல் இருந்தது.

வெளியில் சத்தம் ஓய்ந்திருந்தது. அம்மா அமைதியடைந்திருந்தாள். பெரும்பாலும் 'கிச்சின்' கொட்டிலுக்குள் படுத்திருப்பாள் என ஊகித்துக்கொண்டாள். மெதுவாக எழுந்து வெளியேபோவது போல மலசல கூடம் சென்று திரும்பினாள்.

அப்பா பலகை வாங்கில் இன்னும் இருந்தார். அதனால் துணிவுடன் மலசல கூடம்சென்று திரும்பினாள். வழமையாக வதனாவை கூட்டிக்கொண்டு தான் போவாள். இன்று தனியாக போய் வந்தாள். அவள் போய் வந்த சத்தத்தை அவதானித்த அம்மா தலை நிமிர்த்தி பார்த்ததை அவள் கண்டாள்.

எதுவும் தெரியாதவள் போல் அமைதியாக போய் கடைக்குள் போய் கதவை சாத்தி தாளிட்டுக்கொண்டாள். மெதுவாக போய் படுத்தாள். அவள் இன்னமும் அப்படியே முகத்தை மூடியபடி பஞ்சாங்க நமஸ்காரம் செய்வதைப்போல படுத்திருந்தாள். தர்சாவுக்கு மிக சங்கடமாக இருந்தது. என்ன செய்யலாம் இப்படியே எவ்வளவு நேரம் இருக்க முடியும். முதுகு நோகுமல்லவா? ஏன் இப்படியே இருக்கிறாள். சில வேளை இப்படியே உறங்கியிருப்பாளோ என்று நினைத்தாள்.

அம்மாவின் செயல் குறித்து மிக மன வேதனையாக இருந்தது. என்ன இருந்தாலும் பெரியண்ணா இனி எமக்கு கிடைக்கப்போகிறவர் இல்லை. இந்தவயதிலிருந்து குழந்தையையும் வைத்துக்கொண்டு தனியாக வாழ முடியுமா?. அதுவும் பெண்பிள்ளை. அவளின் வாழ்வும் வீணாகிவிடும். அண்ணியும் குமர் தானே. சுடிதாருடன் ரோட்டில் தனிய சென்றால் நாலு பேர் பின்னால் வருவார்கள். சிவப்பி, அழகிற்கும் குறைவில்லை. வயதும் இருபது தான் மதிக்கக்கூடிய தோற்றம். இவளுக்கு சமூகத்தில் பாதுகாப்புக்கு கட்டாயம் திருமணம் தேவைதான். வேறு யாரையாவது திருமணம் செய்தால் என்னவாகும்?

எங்கள் வீட்டு வாரிசை அவர்கள் எப்படிக்கவனிப்பார்கள். 'ஐசோ' அண்ணான்ரபிள்ளைய அநாதை இல்லத்தில விட்டுடுவினம். இல்லையெண்டால் வீட்டு வேலைக்காறி மாதிரி வளருவாள். ராமண்ணாண்டா... பிரிச்சுப்பாக்கமாட்டன் இதெல்லாம் அம்மாக்கு விளங்குதில்லையே...? பெரிய மனுசி மாதிரி யோசித்துக்கொண்டிருந்தாள். நேரம் போனதே தெரியவில்லை. திரும்பி அண்ணியைப்பார்த்தாள் அவள் அப்படியே கும்புடு போட்டபடி கிடந்தாள்.

என்ன செய்யலாம் என யோசித்தாள். இப்படியே படுத்தால் உடல் நோ ஏற்பட்டுவிடும் எழுப்பி சரியான முறையில் படுக்கச் செய்ய வேண்டும் என நினைத்தபடி...

"அண்ணி...." என்று அழைத்தாள். பதில் இல்லை மீண்டும் இருமுறை அழைத்துப்பார்த்தாள்.

"அண்ணி எழும்பி படுங்கோ..."

பதில் இல்லை வழமையாக கூப்பிட்டவுடன் எழுந்து விடுவாள் அதனால் குழப்பமடைந்தவள். சற்று கிட்டவாக சென்று தட்டினாள். இவளது கை பட்டதும் இளைப்பாறிப்போன பட்டமரம் போல் வதனா சரிந்து விழுந்தாள்.

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## சைவசமயம்



**சண்டிகேஸ்வரர்**

பெரும்பாலான சிவன் கோயில்களில் சிவனை வணங்கி விட்டு பிரகாரம் சுற்றி வரும்போது, துர்க்கை சன்னதிக்கு அருகில் சண்டிகேஸ்வரர் சன்னதி இருக்கும். இவரை வணங்கும் பக்தர்கள், சொடக்கு போட்டோ அல்லது பலமாக கைதட்டியோ வணங்குவார்கள். ஆனால் அப்படி வணங்கக்கூடாது. சண்டிகேஸ்வரர் எப்போதும் தியானத்தில் இருப்பவர். சிவனிடமே ஈஸ்வர பட்டம் பெற்றவர். இவர் கோயிலுக்கு வரும் பக்தர்கள், என்னென்ன கோரிக்கை வைத்தார்கள் என சிவனிடம் கூறுவதாக ஐதீகம். எனவே சிவனை வணங்கிவிட்டு இவரை வணங்கும் போது, மிக மெதுவாக மூன்று முறை கைதட்டி, வந்தேன்... வந்தேன்...வந்தேன்... சிவனின் தரிசனம் கண்டேன்... கண்டேன்.. கண்டேன்...என கூற வேண்டும். அப்படி வணங்கினால் சண்டிகேஸ்வரர் நாம் வந்திருப்பதை அறிந்து, நமக்காக சிவனிடம் சிபாரிசு செய்வார். உடனே நமது கோரிக்கை நிறைவேறும் என்பது நம்பிக்கை.

**மாயை என்றால் என்ன?**

கிருஷ்ண பரமாத்மாவிடம் நாரதர் மாயை என்பது என்ன என்று விளக்கும்படி ஒரு முறை கேட்டுக் கொண்டார். எனக்குத் தாகமாக இருக்கிறது. எனக்குக் குடிக்க சிறிது தண்ணீர் கொண்டு வா. நான் பிறகு விளக்கம் தருகிறேன்" என்றார் கிருஷ்ணர்.

நாரதர் ஒரு சொம்பில் தண்ணீர் எடுத்து வர அருகில் இருந்த ஆற்றிற்குச் செல்கிறார். சொம்பில் தண்ணீர் எடுத்துக் கொண்டு நிமிரும் போது ஆற்றங்கரையில் ஒரு அழகான பெண்ணைப் பார்க்கிறார். அவள் அழகில் வசப்பட்ட அவர் தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி அவளைக் கேட்கிறார்.

அவளோ சற்று தள்ளி வசிக்கும் தன் பெற்றோரிடம் சம்மதம் கேட்கச் சொல்கிறாள். நாரதர் அவளுடைய பெற்றோரிடம் சென்று சம்மதம் வாங்கி அவளைத் திருமணம் செய்து கொள்கிறார். அவளுடன் மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்தி பல குழந்தைகள் பெறுகிறார். ஒரு நாள் ஆற்றில் பெருவெள்ளம் வருகிறது. அந்த வெள்ளத்தில் சிக்கி அவரது மனைவியும், குழந்தைகளும் அடித்துச் செல்லப்படுகிறார்கள்.

தாங்க முடியாத துக்கத்துடன் நாரதர் அழுது கொண்டிருக்கையில் கிருஷ்ணர் வந்து கேட்கிறார். "தண்ணீர் கொண்டு வர வந்தவன் சொம்புத் தண்ணீருடன் ஏன் இங்கேயே நிற்கிறாய்?"

நாரதருக்கு அப்போது தான் கிருஷ்ணர் கேட்டு இங்கு தண்ணீர் எடுத்து வர தான் வந்தது நினைவுக்கு வருகிறது. தன் கையில் சொம்புத் தண்ணீர் அப்படியே இருப்பதையும், அதே உடைகளுடன் அப்படியே தான் இருப்பதையும் அவர் கவனிக்கிறார். திகைப்புடன் நாரதர் கிருஷ்ணரைக் கேட்கிறார். "அப்படியானால் இது வரை நடந்ததும், நான் கண்டதும்?"

"அது தான் மாயை" என்று கிருஷ்ணர் விளக்கினார்.

இந்த மாயையை நாம் தினந்தோறும் காண்கிறோம். உறக்கத்தில் நாம் கனவு காணும் நேரம் சில நிமிடங்களே என்று ஆராய்ச்சிகள் சொல்கின்றன. அந்த சில நிமிடக் கனவில் மிக நீண்ட காலத்தில் நடப்பது போன்று நிறைய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அதில் நாம் பங்கு கொண்டு நிஜமாகவே சுகத்தையும், துக்கத்தையும், பயத்தையும் உணர்கிறோம். உறக்கம் கலையும் வரை அனைத்தும் நிஜமாகவே தெரிகிறது. விழித்த பின் தான் நிஜமல்ல என்பதை உணர்கிறோம்.

## நபிகளின் பொன்மொழிகள்

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு அநீதியிழைக்கவும் மாட்டான். அவனை (பிறரின் அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான். தன் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருக்கிறவரின் தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கிறான். ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகின்றவரைவிட்டு அல்லாஹ்வும் மறுமை நாளின் துன்பங்களில் ஒன்றை நீக்குகிறான். ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கின்றவரின் குறைகளை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கிறான்.

(ஒரு முறை) நபி(ஸல்) அவர்கள், "உன் சகோதரன் அக்கிரமக்காரனாக இருக்கும் நிலையிலும் அக்கிரமத்துக்குள்ளானவனாக இருக்கும் நிலையிலும் அவனுக்கு உதவி செய்" என்று கூறினார்கள். மக்கள், "இறைத்தூதர் அவர்களே! அக்கிரமத்துக்குள்ளானவனுக்கு நாங்கள் உதவுவோம். அக்கிரமக்காரனுக்கு நாங்கள் எப்படி உதவுவோம்?" என்று கேட்டனர். நபி(ஸல்) அவர்கள், "அவனுடைய கைகளைப் பிடித்து (அக்கிரமம் செய்யாவிடாமல் தடுத்து)க் கொள்வாய் (இதுவே, நீ அவனுக்குச் செய்யும் உதவி)" என்று கூறினார்கள் என்பதாக அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அநீதி, மறுமை நாளில் பல இருள்களாகக் காட்சி தரும் என இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்கள்.

அநீதியிழைக்கப்பட்டவரின் சாபத்திற்கு (உங்களால் அநீதிக்கு ஆளானவர் இறைவனிடம் உங்கள் அநீதியைக் குறித்து முறையிட்டு உங்களுக்குக் கேடாகப் பிரார்த்தனை புரிபவதைப் பற்றி) அஞ்சுங்கள். ஏனெனில், அதற்கும் அல்லாஹ்வுக்கும் இடையே எந்தத் திரையும் இல்லை" என்று நபி(ஸல்) அவர்கள் முஆத்(ரலி) யமன் நாட்டுக்கு (ஆளுநராக) அனுப்பி வைத்தபோது கூறினார்கள் என்பதாக இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்கள்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

## பிரசங்கி

அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச்செயலும் நேரிடவேண்டும்.

தன் காலத்தை மனுஷன் அறியான். மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவது போலவும், குருவிகள் கண்ணியில் பிடிபடுவதுபோலவும் மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடுதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள்.

சூரியனுக்குக் கீழே ஞானமுள்ள காரியத்தையும் கண்டேன். அது என் பார்வைக்குப் பெரிதாய்த் தோன்றிற்று.

ஒரு சிறு பட்டணம் இருந்தது. அதிலே இருந்த குடிகள் கொஞ்ச மனிதர். அதற்கு விரோதமாய் ஒரு பெரிய ராஜா வந்து அதை வளைத்துக்கொண்டு அதற்கு எதிராகப் பெரிய கொத்தளங்களைக் கட்டினான்.

அதிலே ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான். அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான். ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை.

ஆகையால் ஏழையின் ஞானம் அசட்டை பண்ணப்பட்டு அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற்போனாலும் பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்.

மூடனை ஆளும் அதிபதியின் கூக்குரலைப்பார்க்கிலும் ஞானிகளுடைய அமரிக்கையான வார்த்தைகளே கேட்கப்படத் தக்கவைகள்.

யுத்த ஆயுதங்களைப்பார்க்கிலும் ஞானமே நலம். பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கொடுப்பான்.

செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப் போகப்பண்ணும். ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்.

ஞானியின் இருதயம் வலதுகையிலும் மூடனின் இருதயமோ இடதுகையிலும் இருக்கும்.

மூடன் வழியிலே நடக்கிறபோதும் மதிகெட்டவனாயிருக்கிறான்.

### இனப்படுகொலை என்ற வார்த்தையினை உச்சரிக்க தமிழர்தரப்பு தயங்குவது ஏன்?

கடந்தவாரத் தொடர்ச்சி..

பிரேரணைக்கு ஆதரவாக கூட்டமைப்பு உறுப்பினர்களான ரவிகரன் மற்றும் அனந்தி சசிதரன், விந்தன் கனகரத்தினம் ஆகியோரும் சித்தார்த்தன் போன்றவர்களும் கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இந்நிலையில் குறித்த பிரேரணையினை தான் ஏற்றுக் கொள்ளவில்லையெனவும், திருத்தங்களை செய்தபின்னர், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் விவாதிக்கலாமெனவும் முதலமைச்சர் கருத்து தெரிவித்தார். இதற்கான காரணத்தினை அவர் கூறவில்லை. எனினும் அதனை நிராகரித்த கே.சிவாஜிலிங்கம் வாக்கெடுப்பிற்கு விடுமாறு கோரினார்.

அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த பேரவை தலைவர் சீ.வி.கே.சிவஞானம் சபையினை ஒத்திவைப்பதாக தெரிவித்து வெளியேற முற்பட்டபோது, கோபமுற்ற சிவாஜிலிங்கம் செங்கோலை தூக்கி வீசியெறிந்தார். கடந்த ஆறு மாத காலத்திற்கு மேலாக இழுபறிபட்டு செல்லும் அப்பிரேரணையினை பொதுவாக்கெடுப்பிற்கு விடுமாறு எதிர்கட்சி தலைவர் தவராசா மற்றும் ஈ.பி டி.பி உறுப்பினர் தவநாதன் ஆகியோரும் குரல் கொடுத்திருந்தபோதும் அதனை அவைத்தலைவர் ஏற்றுக்கொள்ள மறுத்ததற்கான காரணத்தினை நிச்சயம் தெளிவுபடுத்தியிருக்கவேண்டும். அப்படித் தெளிவுபடுத்தும் பட்சத்தில் பல வீண் விமர்சனங்களையும், விவாதங்களையும் தவிர்த்துக்கொள்ளமுடியும். பொது மக்களும் உண்மை என்ன என்பதைப்புரிந்துகொள்வார்கள்.

இலங்கையிலே நடந்தது இனப்படுகொலையே என்பதனை ஆறுமாதகாலமாகியும் ஏற்றுக் கொள்ள வடமாகாணசபையினால் முடியவில்லை என்றால் ஐ.நாசபையும், அதன் உறுப்புநாடுகளும் எப்படி ஏற்றுக்கொள்ளும்? எத்தனை நூற்றாண்டுகள் தேவைப்படும். போர்க்குற்றம், போர்க்குற்ற விசாரணை என்று பேசும் மேடைப்பேச்சாளர்கள் இனியும் சர்வதேசத்திடம் போர்க்குற்றவிசாரணையினைக்கோரி நிற்பார்களேயானால் அவர்களை அரசியலில் இருந்து தூக்கி எறிவதை விட வேறு வழியில்லை.

காரணம் இலங்கையில் எப்போது போர் நடைபெற்றது? நடைபெறாத ஒரு போருக்காக எவ்வாறு விசாரணையினைக்கோரமுடியும்? இலங்கையில் ஒருபோதும்தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையில் போர் நடைபெறவில்லை அங்கே சிங்கள ஆட்சியாளர்களினால் பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் நில அபகரிப்பும், ஆட்கடத்தல்களும், ஆக்கிரமிப்புக்களும் நடைபெற்றது.

**தொடரும்...**

### சிங்களப்பேரினவாதத்துடன் இரண்டறக் கலந்த முதலமைச்சர் விக்னேஸ்வரனின் உரை முதலைக்கண்ணீரா?

(கடந்தவாரத் தொடர்ச்சி...)

இன்றைய சூழ்நிலையில் இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்தப்படாவிடில், ஜெனீவாத் தீர்மானம் உரிய காலத்தில் உண்மையை உரைக்காவிடில் எமது தமிழ் மக்களின் பாடு எவ்வாறு அமையப் போகின்றது என்பதைக் கட்டியம் கூறும் கருத்து மிகுந்த ஆவணமாகவே இந்தப் பிரேரணையை இந்த மதிப்பு சால் சபை முன்னே பிரேரிக்கின்றேன்.


இதை இன்று இங்கு உங்கள் முன்னிலையில் பிரேரித்து அது ஏற்கப்படாதுவிட்டால் நாங்கள் இராணுவ கெடுபிடிகளுக்கு எமது வாழ்நாளெல்லாம் முகம் கொடுக்க நேரிடும். நடந்தது பிழையென்ற மனப்பக்குவத்தை எமது சகோதர சிங்கள அரசியல்வாதிகளின் மனதில் விதைக்கவே இதைக் கொண்டுவந்துள்ளேன். தொடர்ந்து வந்த தமிழர் அழிப்புச் செயல்கள் இனியும் தொடர வேண்டுமா? என்ற கேள்வியை உலக அரங்கில் கேட்டு வைக்கத் தயாரித்த தமிழ் மக்களின் ஆவணம் இந்த ஆங்கில மொழியிலுள்ள ஆவணம். தொடர்ந்து வந்துள்ள சிங்கள அரசியல்வாதிகளின் பேராதிக்கச் செயல்களால் துயருற்ற தமிழ் மக்களின் துன்பங்களை எடுத்துரைக்கும் ஆவணம் இது.

இது உலக மக்களின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இலங்கையின் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகள் உடனேயே தீர்க்கப்பட வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தும் நல்லாவணம். இதனை தம்மைக் குறை கூறும் ஆவணமாக அரசாங்கம் எடுக்காமல் அரசியல் இலாபம் பெறலாம் என்று எதிர்க்கட்சியினர் எண்ணாமல் உண்மையை உணர்ந்து உகந்ததைச் செய்ய இந்த உண்மையாவணம் உதவி புரிய வேண்டும் என்று கூறி பிரேரணையை முன்மொழிகின்றேன்.



# அறிவியல் உலகம்

## மூன்று கெமராக்களுடன் Honor 6+ அறிமுகம்



ஸ்மார்ட் கைப்பேசிகளை வடிவமைக்கும் நிறுவனங்களுள் ஒன்றான Honor 4X ஆனது உயர் வினைத்திறன் கொண்ட Honor 6+ எனும் புதிய ஸ்மார்ட் கைப்பேசியை அறிமுகம் செய்யவுள்ளது. 5.5 அங்குல அளவு மற்றும் 1920 x 1080 Pix el Resolution உடைய HD தொடுதிரை யினைக் கொண்ட இக்கைப்பேசியானது Android 4.4 KitKat இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் Eight Core Kirin 925 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. இவை தவிர இக்கைப்பேசியில் 3 கெமராக்கள் காணப்படுகின்றன. செல்பி மற்றும் வீடியோ அழைப்புக்களுக்காக 8 மெகாபிக்சல்களைக் கொண்ட கெமராவும், பிரதான கெமராக்களாக 8 மெகாபிக்சல்கள் மற்றும் 13 மெகாபிக்சல்களை உடைய இரு கெமராக்களை கொண்டுள்ளது.

## இலக்கை தவிடு பொடியாக்கும் டிரோன்



டிரோன் எனப்படும் ஆளில்லா விமானங்கள் உளவு வேலைக்காக அதிகம் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கா இவ்வகை உளவு விமானங்களை வைத்து ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளில் தீவிரவாதிகள் மீது தாக்குத்லை தொடுத்து வருகிறது. மிகப் பெரிய பயங்கரவாத அமைப்பாக உருவெடுத்துள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளை தாக்கவும் அமெரிக்கா இந்த வகை ஆளில்லா விமானங்களை பயன்படுத்துகிறது. இதனால் இராணுவ வீரர்கள் உயிரிழப்பை தடுக்க முடிகிறது.

சில சமயம் மேலே பறக்கும் போது உண்டாகும் சத்தத்தால் தீவிரவாதிகள் உஷாராகி விடுகின்றனர். இதனையடுத்து அமெரிக்கா அதிநவீன டிரோன்களை தயாரிக்க ஆரம்பித்தது. அதை பற்றி கவலைப்படாத ஈரான் போன்ற நாடுகள் அந்த விமானங்களை சுட்டு வீழ்த்தி அதன் தொழில்நுட்பங்களை கற்று அமெரிக்காவிற்கே பதிலடி கொடுக்கும் வகையில் புதிய டிரோன்களை வடிவமைக்கிறது.

தற்போது அமெரிக்க, இஸ்ரேல் நாடுகளைஎச்சரிக்கும்வகையில்.செங்குத்தாக ஏறி இறங்கும் அதிநவீன டிரோனை ஈரான் தயாரித்துள்ளது. இது நின்ற இடத்தில் இருந்து அப்படியே செங்குத்தாக பறக்கும். செங்குத்தாக தரை இறங்கும். இதனால் நினைத்த இடத்தில் திடீரென தாக்குதல் நடத்த முடியும். உலகிலேயே இதுபோன்ற டிரோன் உருவாக்கப்படுவது இதுவே முதல் முறை என்று டிரோன் திட்ட ஆராய்ச்சியாளர் அப்பாஸ் ஜாம் தெரிவித்திருந்தார்.

டிரோன்கள் பொதுவாக எடை குறைந்த ஒளி ஊடுருவும் பொருட்களால் செய்யப்படுகிறது. இவை விமானத்திற்கு எளிதாக பறக்கும் தன்மையை கொடுக்கிறது. இது எப்போதும் தன்னுடன் infra-red cameras, Global Positioning Systems (GPS), laser or GPS guided missiles ஆகியவற்றை கொண்டிருக்கும். இது தேவையற்ற சிறிய அசைவையும் பதிவு செய்யும்.

பலவகை வடிவங்களில் உருவாக்கப்படும் இவ்வகை ட்ரோன்கள் ரிமோட் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த வேலையை programmers செய்கின்றனர். டிரோன்களால் சேகரிக்கப்படும் தகவல்கள் செயற்கைக்கோளுக்கு அனுப்பப்பட்டு பின்னர் அவை கட்டுப்பாட்டு மையத்தை வந்து சேர்கிறது. மறைந்திருந்து தாக்கும் வண்ணம் செயற்படும் இவை மேகங்களுக்கு மேல் சத்தமின்றி பறக்கின்றன. இவ்வகை அம்சங்களை கொண்ட ட்ரோனின் விலை 50 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

பயங்கர அழிவை உண்டாக்கும் இந்த வகையான டிரோன்கள் தீவிரவாதிகளை தேடித் தேடி ஏவுகணைகளால் தாக்கும் வல்லமை கொண்டது. அமெரிக்கா தனது தாக்குதலுக்கு MQ-9 Reaper, MQ-1B Predator என்ற இரண்டு வகை டிரோன்களை பயன்படுத்துகிறது. இவைதான் ஒசாமா பின்லேடனின் இருப்பிடத்தை கண்டறிய முக்கிய பங்கு வகித்தது. MQ-1B Predator தகவல்களை சேமிப்பதில் அசத்தலாக செயற்படக்கூடியது. இது எந்தவித நாசவேலைக்கும் பயன்படுத்தப்படுவதில்லை. உளவு பார்ப்பதே இதன் முக்கிய வேலை.

மாறாக MQ-9 Reaper பெரிய நாச வேலைகளை செய்யும் டிரோன். இதனிடம் எப்போது பயங்கர அழிவை ஏற்படுத்தும் 4 ஏவுகணைகள் இருக்கும். இந்த ஏவுகணைகள் லேசர் வழியில் கட்டுப்படுத்தப்படுகிறது. தீவிரவாதத்தை கட்டுப்படுத்தும் முயற்சியில் இது போன்ற அதிநவீன டிரோன்களின் பங்கு முக்கியமாக இருக்கிறது.

## அதிக புரதம் - கொஞ்சம் கொழுப்பு



பொதுவாக காய்கறிகளை உணவில் தினமும் சேர்த்து கொள்வது உடல்ரீதியாக மிகவும் நல்லது என்பது அனைவரும் அறிந்த ஓர் விடயமாகும். குறிப்பாக பச்சைக்காய்கறிகளை சாப்பாட்டில் சேர்ப்பது ஆரோக்கியத்தை வலுவாக்கும். அந்த வகையான காய்கறிகளில் ஒன்று தான் அவரைக்காய். அவ்வரைக்காயில் நிறையப் புரதச்சத்து, குறைவான கொழுப்பு, தேவையான கனிமச்சத்துக்கள் மற்றும் விட்டமின்கள் உள்ளன. வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கப்படும் அவரைக்காய் அரிய வகை மருத்துவ குணங்களை கொண்டுள்ளது.

அவரைக்காய் பிஞ்சை வாரம் இருமுறை சமைத்து உண்டுவந்தால் பித்தம் குறையும். அவரைக்காயை அதிகம் உண்டுவந்தால் வெள்ளெழுத்து குறைபாடுகள் நீங்கும். அவரைப் பிஞ்சில் துவர்ப்புச் சுவை உள்ளதால் இது இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.

இரத்த நாளங்களில் உள்ள கொழுப்பைக் குறைக்க உதவுவதால், இதனை இரத்த அழுத்தம், இதயநோய் உள்ளவர்கள் அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது. சர்க்கரை நோய் உள்ளவர்கள் அவரைக்காயை அதிகம் சேர்த்துக்கொண்டால், நீரிழிவு நோயால் உண்டாகும் மயக்கம், தலைச்சுற்றல், கை, கால் மரத்துப்போதல் போன்றவை சரியாகும்.


## பிளேஸ்டேசனில் களமிறங்கும் Rock Band 4



ஹேம் பிரியர்களை கொள்ளை கொள்வதற்கு சோனியின் PlayStation 4 சாதனத்தில் விரைவில் Rock Band 4 ஹேம் களமிறங்கவுள்ளது. தற்போது வடிவமைப்பில் உள்ள இக்ஹேம் ஆனது இந்த வருட இறுதிக்குள் வெளியாகும் என இத்திட்டத்திற்கு பொறுப்பான முகாமையாளர் Eric Pope தெரிவித்துள்ளார்.

2010ம் ஆண்டில் Rock Band 3 வெளியிடப்பட்டதன் பின்னர் தற்போது புதிய தலைமுறைக்குரிய ஹேமிங் சாதனத்தை அடிப்படையாகக் கொண்டு Rock Band 4 ஹேம் வடிவமைக்கப்படுகின்றது. இது ஹேம் பிரியர்களுக்கு பெரும் விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


## நீர் உட்புகாத Quadcopter வடிவமைப்பு



சிறியபொருட்களைகாவிச்செல்வதற்காக வடிவமைக்கப்பட்ட சாதனமாக Quadcopter காணப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தி அமேஷான் போன்ற நிறுவனங்கள் பொருட்களை விநியோகம் செய்துவருகின்றமை அறிந்ததே. இது இவ்வாறிருக்கையில் தற்போது நீர் உட்புகாத தொழில்நுட்பத்தினைக் கொண்ட Quadcopter வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை Splash Drone எனும் விசேட பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது. இதில் 15 நிமிடங்கள் பறப்பில் ஈடுபடுவதற்கான சக்தியை வழங்கக்கூடிய 4,200mAh மின்கலம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் பொருத்தப்பட்டுள்ள ட்ரான்ஸ்மிட்டரினூடாக 1.6 கிலோ மீற்றர்கள் வரையான தூரத்திலிருந்து வீடியோ பதிவுகளை பெற்றுக்கொள்ள முடியும். இதன் விலையானது 1199 டொலர்கள் வரை இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சொனியின் புதிய கைப்பேசிக்கான முற்பதிவுகள் ஆரம்பம்



சொனி புதிதாக வடிவமைத்து அறிமுகம் செய்யவுள்ள Xperia M4 Aqua ஸ்மார்ட் கைப்பேசிக்கான முற்பதிவுகள் ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி ஜேர்மனிக்கான அமேஷான் தளமானது இக்கைப்பேசிக்கான முற்பதிவினை 279 பவுண்ட்ஸ் பெறுமதியில் ஆரம்பித்துள்ளது.

இக்கைப்பேசியானது 5 அங்குல அளவுடையதும், 1280 x 720 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினையும், Octa Core 64 bit Snapdragon Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 8 GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா மற்றும் 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்கான கெமரா ஆகியனவும் தரப்பட்டுள்ளன. மேலும் அடுத்த மாதமளவில் இக்கைப்பேசி விற்பனைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ருசியால் விளையும் தீமைகள்



ஆரோக்கியத்தை மறந்துவிட்டு ருசிக்காகவும், நறுமணத்துக்காவும் உணவை சாப்பிட ஆரம்பித்துவிட்டார்கள் மனிதர்கள். அவ்வாறு, ருசியை கொடுக்கும் அஜினமோட்டோவில் ஏராளமான தீமைகள் மறைந்துள்ளன என்ற உண்மை பலருக்கும் தெரிவதில்லை. இதன் வேதிப் பெயர் 'மொனோ சோடியம் குளுட்டமேட் (Mono Sodium Glutamate) என்பதாகும்.

அஜினமோட்டோ கலந்த உணவை உண்டால், குழந்தைகளுக்கு ஆபத்து. தினமும் மூன்று கிராமுக்கு மேல் அஜினமோட்டோ கலந்த உணவை உண்டால் பெரியவர்களுக்குக் கூட கழுத்துப் பிடிப்பு, தலைவலி, நெஞ்சுவலி, தலைசுற்றல், மூச்சுத் திணறல் வர வாய்ப்பு உள்ளது.

அஜினோமோட்டோ கலந்த உணவுப் பொருட்களை அடிக்கடி சாப்பிடும் குழந்தைகளுக்கு. உடல் வளர்ச்சியைத் தூண்டும் ஹோர்மோன் சுரப்பது வெகுவாகக் குறையும். இதனால். உடல் வளர்ச்சி தடைப்பட்டு உயரம் குறைகிறது. மேலும் இந்த வேதிப் பொருள் மூளையில் 'ஆர்குவேட் நுக்ளியஸ்' என்னும் பகுதியைப் பாதிப்பதால் உடல் எடை தாறுமாறாக அதிகரிக்கும்.

மூளை மட்டுமின்றி இரைப்பை, சிறுகுடல், கல்லீரல் போன்ற உறுப்புகளிலும், அழற்சியையும், சிறு இரத்தக் கசிவையும் ஏற்படுத்துகிறது. இதனால் குழந்தைகளுக்குக் காரணம் கண்டுபிடிக்க முடியாத வயிற்று வலி அடிக்கடி ஏற்படும். ஒவ்வாமை உள்ள ஒரு சிலருக்கு இந்த வேதிப்பொருள் கலந்த உணவைச் சாப்பிட்ட சில நிமிடங்களிலேயே மார்பில் எரிச்சலும், மூச்சுத் திணறலும் ஏற்பட்டு, உடல் வியர்க்க ஆரம்பித்துவிடும்.

பல்வேறு விளம்பரங்களில் அஜினோமோட்டோ ஒரு தாவர உணவு என்றும் அதனால் ஆபத்து எதுவுமில்லை என்றும் தவறான தகவலைப் பரப்புகிறார்கள். தாவரங்களிலும் உயிரைப் பறிக்கும் நச்சுத் தன்மை உண்டு என்பதே உண்மை.

பெரிய பெரிய நட்சத்திர ஹோட்டல்கள் எல்லாம் தங்கள் உணவு வகைகளின் சுவைகளில் ஒரு பிரத்தியேகத் தன்மை இருப்பதாக பீற்றிக்கொண்டாலும், அதற்கான இரகசியங்கள் அஜினோமோட்டோவில்தான் இருக்கிறது. பிறப்புக் கோளாறு, உறுப்புகளில் வளர்ச்சியற்ற தன்மை, தலைவலி, வாந்தி, செரிமானச் சிக்கல், கெட்ட கனவு, தூங்குவதில் சிக்கல், சோம்பல், மிதமாகும் இதயத்துடிப்பு, முடிகொட்டுதல், ஆஸ்துமா மற்றும் சர்க்கரை வியாதி போன்றவை அஜினோமோட்டோவை தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு ஏற்படுவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# விளையாட்டு உலகம்

## இங்கிலாந்து அணித்தலைவர் மோர்கனால் சர்ச்சை



உலகக்கிண்ண போட்டியின் போது தேசிய கீதத்தை பாடாமல் மௌனம் காத்த இங்கிலாந்து அணித்தலைவர் மோர்கனால் சர்ச்சை கிளம்பியுள்ளது. உலகக்கிண்ணப் போட்டி தொடங்கும் முன்பு அந்தந்த நாடுகளின் தேசிய கீதம் இசைக்கப்படும். அப்போது வீரர்களும் சேர்ந்து தேசிய கீதத்தை பாடுவார்கள். ஆனால் இங்கிலாந்து அணித்தலைவர் மோர்கன், அந்த நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்படும் போது பாடாமல் மௌனமாக நிற்பதை வாடிக்கையாக கொண்டிருக்கிறார். இது சலசலப்பை கிளப்பி இருக்கிறது.

மோர்கன், அயர்லாந்தின் டப்ளின் நகரில் பிறந்தவர். 2007ம் ஆண்டு உலகக்கிண்ணத்தில் அயர்லாந்து அணிக்காக விளையாடியிருக்கிறார். அதன் பிறகு இங்கிலாந்து அணிக்கு 2009ம் ஆண்டு தாவினார். படிப்படியாக உயர்ந்து அணித்தலைவராகவும் ஆகிவிட்டார். இந்நிலையில் மோர்கனிடம் இந்த சர்ச்சை குறித்து கேட்ட போது, 'அயர்லாந்து அணிக்கு ஆடிய போதும், இங்கிலாந்துக்காக விளையாடும் போதும் நான் ஒரு போதும் தேசிய கீதத்தை பாடியதில்லை. இது எனது தனிப்பட்ட விவகாரம். அதற்காக இங்கிலாந்து வீரராக இருப்பதற்கு பெருமைப்படவில்லை என்று அர்த்தம் கிடையாது. இங்கிலாந்து அணிக்காக ஆடுவதையும், உலகக்கிண்ணத்தொடரில் அந்த அணியை வழிநடத்துவதையும் மிகச்சிறந்த கௌரவமாக கருதுகிறேன்' என்று கூறியுள்ளார்.

## ஒருவர் மீது ஒருவர் எச்சில் துப்பிய வீரர்கள்



இங்கிலீஸ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியின் போது எதிரணி வீரர் ஒருவரது முகத்தில் எச்சில் துப்பிய குற்றத்திற்காக நியூகேசில் யுனைடெட் வீரருக்கு 7 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. இங்கிலீஸ் பிரீமியர் லீக்கில் கடந்த புதன்கிழமையன்று நியூகேசில் நகரில் உள்ள ஜேம்ஸ் பார்க் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணியுடன் நியூகேசில் யுனைடெட் அணி மோதியது. முதல் பாதி ஆட்டம் முடியும் தருவாயின் போது, மான்செஸ்டர் யுனைடெட் வீரர் ஈவான்ஸ், நியூகேசில் வீரர் பெப்பிஸ் சிஸ்சேயிடம் இருந்து பந்தை கைப்பற்ற முயற்சித்தார்.

அப்போது இரு வீரர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு ஒருவர் மீது ஒருவர் எச்சில் துப்பிக்கொண்டனர். மைதானத்தில் எச்சில் துப்பி விளையாடிய இவர்களை பார்த்து கூடியிருந்த ரசிகர்கள் அதிர்ச்சியடைந்தனர். தொடர்ந்து பெப்பிஸ் சிஸ்சே சிவப்பு அட்டை காட்டப்பட்டு களத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஏப்.ஏ.3 பேர் கொண்ட கமிட்டி அமைத்து விசாரணை நடத்தியது.

இதில் மான்செஸ்டர் யுனைடெட்டின் அயர்லாந்து ஸ்டிரைக்கர் ஈவான்ஸ் மீது முதலில் பெப்பிஸ் சிஸ்சே மீது எச்சில் துப்பியுள்ளார். தான் செய்த தவறை உணர்ந்து சிஸ்சே மன்னிப்பு கேட்டதையடுத்து அவருக்கு 7 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. மான்செஸ்டர் யுனைடெட் அணி வீரர் ஈவான்சுக்கும் 6 முதல் 7 போட்டிகள் வரை தடை விதிக்கப்படும்எனத்எதிர்பார்க்கப்படுகிறது, ஆனால் ஈவான்சுக்கு அளிக்கப்படும் தண்டனை விபரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

## நிருபரை தகாத வார்த்தைகளால் வெளுத்து வாங்கிய கோஹ்லி



இந்திய அணியின்துணை அணித்தலைவர் கோஹ்லி, பத்திரிகையாளர் ஒருவரை தகாத வார்த்தைகளால் திட்டிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியா-மேற்கிந்திய தீவுகள் அணிகள் இடையிலான லீக் ஆட்டம் பெர்த்தில் நடக்கிறது. இதையொட்டி இந்திய வீரர்கள் பெர்த்தில் பயிற்சியில் ஈடுபட்டனர்.

வலைப் பயிற்சியை முடித்துவிட்டு தனது அறைக்கு கோஹ்லி திரும்பிக் கொண்டிருந்த போது, அங்கு நின்று கொண்டிருந்த இந்திய தேசிய நாளிதழின் நிருபர் ஒருவரை பார்த்து கண்டபடி தகாத வார்த்தைகளால் திட்டி தீர்த்தார். பின்னர் கோபமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். இந்திய அணியினர் எவரும் இதை எதிர்பார்க்காததால் என்ன நடந்ததெனப் புரியாமல் அனைவரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

இதனால் அந்த இடத்தில் திடீர் பரபரப்பு உண்டானது. சம்பந்தப்பட்ட பத்திரிகையாளருக்கும் ஏன் கோஹ்லி திட்டினார் எனத் தெரியவில்லை. தேசிய நாளிதழில் விராட் கோஹ்லி மற்றும் அவரது காதலியும், இந்தி நடிகையுமான அனுஷ்கா சர்மா குறித்து வெளியான செய்திக்கு சம்பந்தப்பட்ட நிருபர் தான் காரணம் என்று கருதி விராட் கோஹ்லி பொது இடத்தில் பொறுமை இழந்து இவ்வாறு நடந்து கொண்டது தெரியவந்தது. ஆனால் அந்த செய்திக்கும் குறிப்பிட்ட நிருபருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பது பின்னர் தெரிந்ததும் விராட் கோஹ்லி வருத்தம் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி, கோஹ்லியை அழைத்து, பொது இடத்தில் அமைதியை கடைபிடிக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் எதிர்காலத்தில், இந்திய அணியின் அணித்தலைவராக உருவாவதை இத்தகைய செயல்கள் பாதிக்கும் எனவும் கோஹ்லிக்கு அறிவுரை கூறியுள்ளார்.


## சரியான பாதையில் பயணிக்கும் இலங்கை - சனத் ஜெயசூரியா



உலகக்கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தினால் இலங்கை அணியின் தன்னம்பிக்கை அதிகரிக்கும் என்று இலங்கை அணியின் தெரிவு குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார். வருகின்ற 8ம் திகதி சிட்னியில் நடக்கும் போட்டியில் இலங்கை அணி, அவுஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது. இது தொடர்பாக இலங்கை அணியின் தெரிவு குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா கருத்து தெரிவிக்கையில், அவுஸ்திரேலியாவுடனான மோதல் மிக முக்கியமானது. அந்த அணியை வீழ்த்தும் பட்சத்தில் இலங்கை வீரர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

இலங்கை அணியில் நல்ல மாற்றம் தெரிகிறது. வங்கதேசத்திற்குஎதிரானபோட்டியில் சங்கக்கார, டில்ஷானும், இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் டில்ஷான், திரிமன்னேவும் ஜோடி சேர்ந்து சிறப்பாக விளையாடினர். இலங்கை அணியில் துடுப்பாட்டம் வலுவாக இருக்கிறது. அதே போல பந்துவீச்சில் மலிங்கா, திசர பெரேரா அசத்த தொடங்கியுள்ளனர். நாங்கள் சரியான பாதையை நோக்கி பயணிக்கிறோம் என்று கூறியுள்ளார்.

## அதிரடி வீரராக அவதாரமெடுத்த அப்ரிடி



உலகக்கிண்ண சுற்றுத்தொடரில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான லீக் போட்டியில் சயித் அப்ரிடி 8000 ஓட்டங்கள் எனும் மைல் கல்லை கடந்துள்ளார். இதுவரை 8000 ஓட்டங்களை கடந்தவர்களில் அதிக ஸ்ட்ரைக் ரேட்டை உடையவர் என்ற சாதனையையும் இவர் தன்வசப்படுத்தியுள்ளார்.

இவரது ஸ்ட்ரைக் ரேட் 116.86 ஆகும். இந்தப்பட்டியலில் அப்ரிடியை அடுத்து இந்திய அணி வீரர் ஷேவாக், இலங்கையின் சனத் ஜயசூரியா மற்றும் டில்சான் ஆகியோர் முறையே நான்காம் மற்றும் எட்டாம் இடங்களிலுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மயங்கி விழுந்த கால்பந்து வீரரால் பரபரப்பு



இங்கிலீஸ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியின் போது மைதானத்தில் மயங்கி விழுந்த வீரரினால் பரபரப்பு ஏற்பட்டது. கால்பந்து வீரர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது திடீரென்று இதயம் செயலிழந்து போவதால் மைதானத்தில் சுருண்டு விழுவது வாடிக்கையாகி வருகிறது. இதய நோய் காரணமாக பாதிக்கப்படும் இந்த வீரர்கள், சில நேரங்களில் உயிரிழப்பதும் உண்டு.

இங்கிலீஸ் பிரீமியர் லீக் போட்டியில் ஸ்வான்சீ மற்றும் டாட்டன்ஹாம் அணிகளுக்கிடையிலான போட்டி லண்டன் வொயிட்ஹார்ட் லேன் மைதானத்தில் நடந்தது. இந்த போட்டியின் போது ஸ்வான்சீ அணியை சேர்ந்த பிரான்ஸ் ஸ்டிரைக்கர் பெஃப்டிம்பி கோமிஸ், இதய நோயினால் பாதிக்கப்பட்டு மைதானத்தில் சுருண்டு விழுந்தார். உடனடியாக அவருக்கு மைதானத்தில் வைத்தே மருத்துவக்குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

முதல் கட்டமாக ஒக்சிஜன் செலுத்தப்பட்டு பின்னர் சி.ஆர்.பி எனப்படும் அவசர கால முதல் உதவி சிகிச்சையும் கோமிசுக்கு அளிக்கப்பட்டது. தொடர்ந்து லண்டனில் உள்ள மருத்துவமனையில் கோமிஸ் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். தற்போது அவரது உடல் நிலை முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும், அபாய கட்டத்தை தாண்டி விட்டதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## பிரபல நடிகையை கரம்பிடிக்கப் போகும் ஹர்பஜன் சிங்



இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் தனது நீண்டநாள் காதலியான கீதா பசராவை மணம் புரிய உள்ளார். ஹர்பஜன்சிங், கீதாவும் நீண்ட காலமாக காதலித்து வருவதாக அவ்வப்போது ஊடகங்களில் செய்தி வருவது உண்டு. ஆனால் இதனை இருவருமே மறுத்து வந்தனர்.

இருப்பினும் ஐ.பி.எல். போட்டிகளில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக ஹர்பஜன் சிங் விளையாடும் போது கீதாவும் உடன் வருவார்.

இந்நிலையில் இருவரும் இம்மாத இறுதியில் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்துள்ளதாகவும், இவர்களது திருமணத்தை குடும்பத்தினர் நடத்த முடிவு செய்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. கீதா பசாரா சில ஹிந்திமற்றும்பஞ்சாபிதிரைப்படங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எதிரணியை புரட்டியெடுக்கும் வீரர்களை புறக்கணித்த ஐ.பி.எல்

உலகக்கிண்ணத்தொடரில் அசத்திவரும் முன்னணி வீரர்கள் நடைபெறவுள்ள ஐ.பி.எல் தொடரில் கழற்றிவிடப்பட்டுள்ளனர். அதன் படி, தென் ஆபிரிக்காவின் அதிரடி வீரர் ஆம்லா நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் கலக்கி வருகிறார். இவர் இதுவரை 4 போட்டிகளில் விளையாடி 257 ஓட்டங்களை குவித்துள்ளார். இவரும் மேக்ஸ்வெல், டிவில்லியர்ஸ் போன்று அதிரடி காட்டும் வீரர் தான். ஆனால் ஐ.பி.எல் தொடரில் எந்த அணியும் இவரை வாங்க முன்வரவில்லை. அடுத்து இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரர்களான டில்ஷான் மற்றும் சங்கக்கார, இவர்களும் இந்த ஐ.பி.எல தொடரில் கண்டுகொள்ளப்படவில்லை. ஆனால் இவர்கள் தங்கள் அணிக்காக துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். சங்கக்கார 4 போட்டிகளில் விளையாடி 268 ஓட்டங்களையும், டில்ஷான் 229 ஓட்டங்களையும் குவித்துள்ளனர்.

மேற்கிந்திய தீவுகளின் அதிரடி வீரர் சாமுவேல்ஸூம் கழற்றிவிடப்பட்டுள்ளார். இவர் அந்த அணியில் கிறிஸ் கெய்லுக்கு அடுத்தபடியாக அதிக ஓட்டங்கள் குவித்துள்ளார். 4 போட்டிகளில் விளையாடி 192 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

# உலகச் செய்திகள்

## பசியால் எலும்புக்கூடுகளாய் போன மனிதர்கள்



பாரிசில் உள்ள பல்பொருள் அங்காடியில் 200 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது 'அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரான்சின் தலை நகரான பாரிசில் உள்ள Boulevard Sébastopol இடத்தில் Monoprix என்ற பல்பொருள் அங்காடி ஒன்று அமைந்துள்ளது. இந்நிலையில், இக்கட்டிடத்தின் திருத்த பணிகள் நடைபெற்ற போது 200க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பல்பொருள் அங்காடியின் மேலாளர், தேசிய அகழ்வாராய்ச்சி நிறுவனத்தின் தடுப்பு பிரிவினருக்கு (INRAP) தகவல் தெரிவித்துள்ளார். தற்போது இந்த எலும்புக்கூடுகள் பற்றி அகழ்வாராய்ச்சி நிறுவனம் ஆராய்ச்சி மேற்கொண்டு வருகிறது.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது, நோயின் தாக்கம் அல்லது பசிக்கொடுமையினால் இவர்கள் இறந்திருக்கலாம் என்றும் தற்போது இந்த பல்பொருள் அங்காடி இருக்கும் இடம், 11ம் நூற்றாண்டில் மருத்துவமனையில் இறந்தவர்களின் உடல்களை புதைக்கும் இடமாக இருந்தது எனவும் தெரிவித்துள்ளனர். இந்த இடத்தில் மேலும் தோண்டினால் ஏராளமான எலும்புக்கூடுகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது, இந்த எலும்புக்கூடுகள் ஆராய்ச்சிகள்மேற்கொள்ளஉதவுகின்றன என கூறியுள்ளனர்.

## பின்லேடன் வீட்டில் எடுக்கப்பட்ட ஆவணங்களால் அதிர்ச்சி



அல்கொய்தா அமைப்பின் முன்னாள் தலைவன் ஒசாமா பின்லேடன் வீட்டில் எடுக்கப்பட்ட ஆவணங்களில் பல திடுக்கிடும்தகவல்கள்வெளியாகியுள்ளன. பின்லேடன் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்பு எழுதிய ஆவணங்களில் உள்ள தகவல்கள் அமெரிக்காவின் ப்ருக்றீன் (Brugreen) நகரில் நடந்து வரும் வழக்கு விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த ஆவணங்களை ஆய்வு செய்ததில், கடைசி நாட்களில் ஒசாமா பாகிஸ்தானில் இருந்தது குறித்த விவரங்கள் வெளியே வரவில்லை என தெரியவந்துள்ளது. இதனைதொடர்ந்து அவர் ஐ.எஸ்.ஐ ஆட்களின் உதவி யுடன் ஆப்கானிஸ்தானில் உள்ள டோரா போரா (Dora Bera) மலையில் இருந்து, பாகிஸ்தானுக்கு கடந்த 2001ம் ஆண்டிலேயே தப்பிக்க திட்டமிட்டுள்ளார் என்பது உறுதியாகியுள்ளது.

இதன்பின் ஸ்வாட் (Swaat) பள்ளத்தாக்கிற்கு சென்ற அவர் பாகிஸ்தானில் உள்ள ஹபிபூருக்கு (Habiboor) சென்று தனது மனைவிகள், குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் 2 ஆண்டுகள் இருந்துள்ளார். இந்நிலையில் ஒசாமாவின் இருப்பிடம் பற்றி தெரியாது என கூறிய ஐ.எஸ்.ஐ, அவரை யாரும் கண்டுபிடித்துவிடாமல் இருக்க குழு ஒன்றை நியமித்திருந்ததாகவும், அந்த குழு ஒசாமாவை பாதுகாத்து வந்ததாகவும் ஆவணங்களில் கூறப்படுகிறது.

இதற்கிடையே ஒசாமா அப்பேத்தா பாத்தில் (Abbethabath) வசித்து வந்தது ஐ.எஸ்.ஐ தலைவர் அகமது சுஜா பாஷாவுக்கு (Ahmed Suja Bhasha) தெரிந்திருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## எந்நேரமும் புகைப்பிடிக்கும் கனேடியர்கள்



கனேடியர்கள் பொது இடங்களில் அதிகளவில் புகைப்பிடிப்பதாக ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. கனடாவில் கியூபெக் (Quebec) நகரில் கடந்த 2006ம் ஆண்டு முதல் பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்குத்தடை விதிக்கப்பட்டது. இதன்பின் புகைப்பிடிப்பது குறித்து ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. ஆனால் அதில் பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டபோதும், புகைப்பவர்களுக்கிடையே துளியும் மாற்றம் ஏற்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் ஒருவர் புகைப்பிடிப்பதால் அருகிலுள்ள மற்றவர் உடல்நலன் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்திலேயே பொது இடங்களில் புகைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் புகைப்பிடிப்பது பிறரது உடல்நலனுக்குக் கேடு விளைவிக்கக் கூடாது என்ற விழிப்புணர்வை இந்தத் தடையால் ஏற்படுத்த முடியவில்லை என ஆய்வில் கூறப்பட்டுள்ளது. மேலும் புகைப்பிடிப்பவர்கள் வீடுகளிலும் புகைத்து குடும்பத்தினரின் உடல் நலனுக்கு தீங்கு விளைவிக்கின்றனர் என்று அந்த ஆய்வுக் குழுவைச் சேர்ந்த நபர் ஒருவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

## ஊழல் பணத்தால் கோடி கோடியாய் குவியும் சொத்து

பிரித்தானியாவில் ஊழல் பணத்தை வைத்து வெளிநாட்டவர் சொத்துக்களை வாங்கி குவிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக பிரித்தானியாவை சேர்ந்த Transparency International என்ற ஊழல் எதிர்ப்பு நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது, பணமோசடியில் ஈடுபட்ட பல வெளிநாட்டு நிறுவனங்கள் பிரித்தானியாவில் கடந்த 2004ம் ஆண்டு முதல் சுமார் 307 மில்லியன் டொலர்கள் மதிப்பிலான சொத்துக்களை வாங்கியுள்ளனர். இதற்கு காரணம் பிரித்தானியாவில் உள்ள வளமான சந்தை நிலவரங்கள் தான் என கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து Transparency International நிறுவனத்தின் இயக்குனர் ரொபர்ட் பாரிங்டன் (Robert Barrington) கூறுகையில், பிரித்தானிய அரசு பணமோசடிக்கான சட்ட திட்டங்களை கடுமையாக்கவேண்டும் என்றும் குறிப்பிட்ட சொத்துக்களை வாங்கியுள்ள நிறுவனங்களின் உயர் அதிகாரிகளை தொடர்புகொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார். மேலும் இவ்விவகாரம் தொடர்பான வரிகள் உள்ளிட்ட பல தகவல்களை சேகரித்து விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

## கிறிஸ்துவுக்கு முன்பு கட்டப்பட்ட இளவரசரின் கல்லறை



கி.மு 5ம் நூற்றாண்டை சேர்ந்த கல்லறை ஒன்றை கண்டு பிடித்து பிரான்ஸ் தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் சாதனை செய்துள்ளனர். கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் முதல் பிரான்ஸின் சாம்பக்னி (Champagne) நகரத்தில் உள்ள Lavau என்ற பகுதியில் பிரான்ஸ் தேசிய தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர்கள் குழு ஆய்வில் ஈடுபட்டு வந்தது.

இந்த ஆய்வில், கி.மு 5ம் நூற்றாண்டை, அதாவது கிறிஸ்துவுக்கு முன்பு இருந்த இரும்புக்காலத்தை சேர்ந்த பழமையான கல்லறை ஒன்றை கண்டுபிடித்துள்ளதாக அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர். சுமார் 130 அடி நீளமுள்ள அந்த கல்லறையின் மையப்பகுதி 150 சதுர அடியாக இருப்பதாக ஆராய்ச்சி குழு தெரிவித்துள்ளது. இதுகுறித்து தொல்லியல் ஆராய்ச்சி துறையின் தலைவர் கூறுகையில், கல்லறையை சுற்றி உயர்தர ஆபரணங்கள் இருப்பதால், அந்த கல்லறை Celtic எனப்படும் பழங்குடியினர் இனத்தை சேர்ந்த ஒரு இளவரசனின் கல்லறையாக இருக்கலாம் என கருதுகிறோம்.

பல ஆண்டுகள் இந்த கல்லறை நீடிக்க வேண்டும் என்பதற்காக, பல்வேறு கட்டமைப்பு கலைகளை பயன்படுத்தி இதனை உருவாக்கியுள்ளனர். இந்த ஆபரணங்களை ஆய்வு செய்ததில், Mediterranean மற்றும் Celts, இனமக்களிடையே வர்த்தக பரிமாற்றங்கள் நடந்திருக்க வாய்ப்புள்ளது என நம்புகிறோம். இதுவரை நாங்கள் கல்லறையை திறக்கவில்லை என்றும், அதை திறந்தால் பல அரிய புராண தகவல்களை சேகரிக்க தொல்லியல் துறைக்கு பெரும் உதவியாக இருக்கும் எனவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

## ரஷ்யாவை எச்சரிக்கும் மேற்கத்திய நாடுகள்



உக்ரைன் அமைதி ஒப்பந்தத்தை ரஷ்யா மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்குலக நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பிரித்தானிய பிரதமர் டேவிட் கேமரூன், பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலாந்த், ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல், இத்தாலியப் பிரதமர் மேட்டியோ ரென்ஸி, ஐரோப்பிய கவுன்சில் தலைவர் டொனால்டு டஸ்க் ஆகியோர் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். வீடியோ கொன்பரன்ஸ் முறையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த சந்திப்பின் போது கிழக்கு உக்ரைனில் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் குலைக்கும் வகையில் செயற்படுவோருக்கு எதிரான கடுமையான பதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

பெப்ரவரி மாதம் 12ம் திகதியும், கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதமும் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, உக்ரைன் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண அனைத்து உதவிகளையும் செய்வதாக தலைவர்கள் உறுதியளித்தனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உலகின் முதல் மனிதனின் உடல் பாகம் கண்டுபிடிப்பு



உலகின் முதல் மனிதர்களில் ஒருவனது உடல் பாகம் எத்தியோப்பியாவில் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவின் Afar நகர பகுதிகளில் சமீபத்தில் ஆராய்ச்சியாளர்கள் தீவிர ஆய்வில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இங்கு "ஹோமோ சாபியன்ஸ்" என்ற இனத்தை சேர்ந்த மனித உடல் பாகங்கள் சமீபகாலமாக அதிகமாக கண்டெடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக Ledi-Geraru என்ற பகுதியில் சுமார் 48 லட்சம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒரு மனிதனின் 'தாடை எலும்பை' (Jawbone) Chalachew Seyoum என்ற எத்தியோப்பிய மாணவன் கண்டுபிடித்துள்ளார். இதனை ஆய்வு செய்த அமெரிக்காவின் Navada பல்கலைகழக ஆராய்ச்சியாளர் கூறுகையில், கடந்த 1974ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட சுமார் 60 லட்சம் ஆண்டுகள் பழமையான குரங்கை போன்ற மனித தலை பகுதிக்கும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தாடை எலும்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

எனவே இது மனித பரிணாம வளர்ச்சியின் மிக முக்கிய மாற்றங்கள் ஆகும் என தெரிவித்துள்ளார். இதுகுறித்து Arizona பல்கலைகழக இயக்குனரான William Kimbel கூறுகையில், இந்த தாடை எலும்பு பாதி குரங்கினத்தையும், பாதி மனித இனத்தையும் பிரதிபலிப்பதாக தெரிவித்துள்ளார். மேலும் இந்த புதிய கண்டுபிடிப்பு மனித இன பரிணாமங்கள் குறித்த ஆராய்ச்சியில் உள்ள சில மர்மங்களை நீக்க உதவும் என பிரித்தானிய பல்கலைகழக ஆராய்ச்சியாளர் Fred Spoor கூறியுள்ளார்.


## நைஜீரியாவில் குழந்தைகளை படுகொலை செய்யும் கொடூரம்

நைஜீரியாவில் போகோ . ஹராம் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 68 பேர் கொல்லப்பட்டுள்ளனர். போகோ ஹராம் குழுவைக் கட்டுப்படுத்த நைஜீரிய ராணுவம் கடுமையாகப் போராடி வருகிறது. இந்நிலையில் வட கிழக்குப் பகுதியில் உள்ள போர்னோ மாகாணத்தில் உள்ள நஜாபா என்ற கிராமத்தில் புகுந்த தீவிரவாதிகள், வீடுகளைப் பார்த்துச் சுட்டனர். பிறகு கிராமத்திற்குத் தீ வைத்தனர் என இந்தத் தாக்குதலில் தப்பியவர்கள் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை காலையிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றாலும், தற்போது தான் அந்தத் தாக்குதல் குறித்து வெளியுலகிற்குத் தெரியவந்துள்ளது. இஸ்லாமிய அரசை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக ஆயிரக்கணக்கான மக்களை போகோ ஹராம் கொலை செய்துவருகிறது. ஆண்களையும் ஆண் குழந்தைகளையுமே துப்பாக்கிதாரிகள் குறிவைத்துத் தாக்கியதாக சஹாரா ரிப்போர்ட்டர்ஸ் என்ற இணைய தளம் தெரிவித்துள்ளது.

# விந்தை உலகம்

## நெதர்லாந்தில் புத்தர் சிலைக்குள் 1000 ஆண்டுகளாக மறைந்திருந்த துறவி



நெதர்லாந்து நாட்டின் அசென் நகரிலுள்ள டெரெண்ட்ஸ் (Drents) அருங்காட்சியகத்தில் புத்தர் சிலை ஒன்றை CT Scan எனப்படும் அதிநுட்பமான பரிசோதனைக்கு உட்படுத்தினர். இந்த பரிசோதனையில், புத்தர் சிலைக்கு உள்ளே அமர்ந்தவாறு எலும்புக்கூடு ஒன்று இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.


இதை மேலும் பரிசோதனை செய்ததில், பதினோறாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனத்துறவி ஒருவரின் உடலை அமர்ந்த நிலையில் பதப்படுத்தி, அதன் மேல் புத்தர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், இந்த எலும்புக்கூடுகளை ஆய்வு செய்கையில், இவர் சீனாவில் புகழ்பெற்ற சோகுஷின்புட்சு (Sokushinbutsu) என்ற கலையை பயிற்றுவித்த மாஸ்டர் லியுகுவான் (Master Liuquan) என்ற துறவியாய் இருக்கலாம் என யூகிக்கிறோம். இவர் இறப்பிற்கு பின், இவரது உடல் புத்தர் சிலைக்குள் வைக்கப்பட்டு இருக்கலாம் அல்லது இவரே அமர்ந்த நிலையில் இறந்து புத்தர் சிலையை அமைக்க கூறியிருக்கலாம். எனினும் இதை உறுதி செய்ய கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூட்டின் ஒரு பகுதியை மரபணு (DNA) சோதனைக்கு அனுப்பியுள்ளோம் என கூறியுள்ளனர். தற்போது ஹங்கேரி நாட்டிற்கு கொண்டு செல்லப்படும் இந்த புத்தர் சிலை, அங்குள்ள அருங்காட்சியகத்தில் மே மாதம் வரை கண்காட்சிக்கு வைக்கப்படும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## உயர் வலுக்கொண்ட புதிய கார் அறிமுகம்

பிரபல கார் வடிவமைப்பு நிறுவனமான Koenigsegg ஜெனீவாவில் இடம்பெற்று வரும் சர்வதேச மோட்டார் ஷோவில் 1500 குதிரை வலுக்கொண்ட காரை அறிமுகம் செய்துள்ளது. Koenigsegg Regera எனும் இக்காரின் முழுமையான சிறப்பம்சங்கள் வெளியிடப்படாத நிலையில் ஓய்விலிருந்து மணிக்கு 250 மைல்கள் எனும் வேகத்தை அடைவதற்கு 20 செக்கன்களே இக்கார் எடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் பல புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கியுள்ள இக்கார் வகையில் தற்போது 80 மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.




## பாலைவனத்தின் நடுவே ஓர் அதிசய நகரம்...!

பெரு நாட்டில் உள்ள பாலைவன பகுதியின் நடுவே Huacachina என்ற அழகிய சோலை அமைந்துள்ளது. பாலைவனம் என்றாலே மணல் மேடுகள் மட்டும் தான் இருப்பதை பார்த்திருப்போம். ஆனால் அதிசயமாக பெருவில் உள்ள இந்த வறண்ட வெப்பநிலை கொண்ட இடத்தில், செழிப்பான சோலை ஒன்று அமைந்துள்ளது. இந்த அழகிய சோலையில் அழகிய ஏரி அமைந்துள்ளது. மேலும் பனை மரங்கள், பூக்கள் என பூத்துக் குலுங்குகின்றன. இந்த இயற்கை அதிசயத்தை காண விரும்பும் சாகச விரும்பிகள் பலர் ஆண்டு தோறும் இங்கு சுற்றுலாக்காக படையெடுக்கின்றனர். இந்த குட்டி நகரத்தில் 96 குடியிருப்பாளர்கள் வசித்து வருகின்றனர். இங்கு கிராமிய ஹொட்டல்கள், கடைகள் மற்றும் நூலகம் கூட இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த சோலையின் நடுவே அமைந்துள்ள ஏரி போன்ற நீர்நிலையில் உள்ள தண்ணீருக்கு நோய் தீர்க்கும் பண்புகள் உள்ளதாக பல்லாண்டு காலமாக மக்கள் நம்பி வருகின்றனர். Huacachina என அழைக்கப்படும் இந்த மந்திர நகர மக்கள் இங்குள்ள மணல் வளத்தை கொண்டே தொழில் செய்து வருகின்றனர். இந்த நகரத்தில் அமைந்துள்ள அந்த ஏரி இயற்கையாகவே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த ஏரியில் உள்ள நீருக்கு குணப்படுத்தும் தன்மை உள்ளதாக கருதும் மக்கள் இதனை புனிதமாக கருதி வருகின்றனர். இந்த ஏரி உருவானதற்கு பல கதைகள் அங்குள்ள மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ளது. இந்நிலையில், இந்த அதிசய நகரத்தினை கலாச்சார பாரம்பரிய தளமாக கலாச்சார தேசிய நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், இந்த மந்திர நகரத்தின் ஏரியில் உள்ள நீரானது எந்த காரணத்தினாலும் கானல் நீராக மாறாது என்று மக்கள் மத்தியில் தீவிர நம்பிக்கை நிலவுகிறது.





## விசித்திரமான தருணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்....




நதி மங்கையர் சொய்ஸ்

மங்கையர் மனங்கவரும் அனைத்துரக அழகு சாதன
பொருட்களையும் மொத்தமாக ஒரே இடத்தில்
கொள்வனவு செய்திட நாடவேண்டிய ஒரே இடம்

வைரபுளியங்குளத்தில் இயங்கி வந்த நதி மங்கையர் சோயஸ் இடம் மாற்றப்பட்டு இலக்கம் 210B புகையிரத நிலைய வீதி, கரப்பங்காடு (குருமன்காடு) எனும் முகவரியில் புதுப் பொலிவுடன் இயங்கி வருகின்றது. விசேட விலைக்கழிவுகளுடன் அனைத்துப்பொருட்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

210B, புகையிரத நிலைய வீதி,
கரப்பன் காடு, குருமன்காடு,
வவுனியா.

தொ.பே இல-0245688583








Vanni Inn

email - vanni_inn@yahoo.com

Chinese, Indian, Sri Lankan Food available



Hotel Vanni Inn

A/C Room, Non A/C Room, Com Room, Quality Foods, Hall, Vehicle Parking

வவுனியா மண்ணில் நவீன வசதிகளுடன் கூடிய மங்கலகரமான அனைத்து
நிகழ்வுகளுக்கும், மண்டபத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

2nd Cross Street, Vavuniya. Tel:- 0242222074, Fax:- 0242222074


இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 08.03.2015 அன்று வெளியிடப்பட்டது.